பிஸ்மில்லாஹி.

கிர்த்தனூரஞ்சிதம்.

[illegible]

காயற்பட்டணம்

மாதீஹுஹர்றக்குல்

ஷெய்கு வாதக்கத் துல்லா வொலிநாயகம்

அவர்களின் பௌத்ரரும்

முகம்மது சுலைமான் லெப்பை ஆலிம் ஹாஜியார்

சாஹிபவர்களின் புத்திரருமாகிய

பா - சு.

முகம்மது அப்துல்லா லெப்பை ஆலிம்

அவர்களால் இயற்றப்பட்டு,

ஐயன்பேட்டை

ஸ்ரீமாந்

கா. அப்துல்கனி ஸாகிபவர்களின்

நன்முயற்சியால்

சென்னை :

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

ஹிஜ்ரி 1327 றபீயுல் ஆகிறுமீ.

1909.

பிஸ்மில்லாஹி.

கீர்த்தனாரஞ்சிதம்.

இஃது

காயற்பட்டணம்

மாதிஹுர்றசூல்

ஷெய்கு ஸதக்கத்துல்லா வொலி நாயகம்

அவர்களின் பௌத்திரரும்

முகம்மது சுலைமான் லெப்பை ஆலிம் ஹாஜியார்

சாஹிபவர்களின் புத்திரருமாகிய

பா - சு.

முகம்மது அப்துல்லா லெப்பை ஆலிம்

அவர்களால் இயற்றப்பட்டு,

ஐயம்பேட்டை

ஸ்ரீமாந்

கா. அப்துல்கனிஸாகிபவர்களின்

நன்முயற்சியால்

சென்னை:

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

ஹிஜ்ரி 1327 ரபீயுல்ஆகிர் மீ

1909

பிஸ்மில்லாஹி.

சிறப்புப்பாயிரங்கள்.

இஃது
மதுரைத் தமிழ்ச்சங்கவித்வானும்
டிஸ்திரிக்கட்டு போர்டுமெம்பரும்
இளையான்குடி யூனியன் சேர்மனும்
மாஜிஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டுமாகிய
சோதுகுடி ஸ்ரீமத்
எம். கே. எம். அப்துல்காதிறுறாவுத்தர் சாகிப்பஹதூர்
அவர்களியற்றிய

நிலைமண்டில வாசிரியப்பா.

திருவளர்வாரி மருவியவுலகிற்
றநீவேயன்ன தருப்பலசெறிந்து
ஒருமுத்தரும்பி மாகதங்காய்த்துப்
பவளம்பழுத்த திவள்பசுஞ்சோலைக்
கிதலிமாவருக்கைத் ததும்புதேனருவி
கதுமெனப்பாய்தலி னறுமணம்பெற்று
சங்கத்தரளந் தனித்தனிநிலவொளி
மங்கமிளிரும் வாவியங்கரையில்
வாயற்படிதொறூஉ மாமணிகுயிற்றிய
காயற்பட்டினக் கவின்பதிவாழ்வோன்
சிதக்கருத்தமைந்து தெள்ளியதபோதனர்
சதகத்துல்லா சாகிபுநாதர்
பாம்பரையினிலொரு பரிதியாயுதித்த்
வரம்பறுநூல்களை மாசறக்கற்றோன்
அறபியலாதிய வருங்கலைபிறவும்
ஒருங்குடன்பயின்ற நிரம்பியகலைஞன்
முப்புவிபுகலு முகம்மதப்துல்லா
லெப்பைஆலிம் கிமசலனென்மாட்சியன்
யன்னுமெய்யன்பு வளர்தரவருண்மிகு
முன்னோனபிமுதன் மூதன்பியோரைத்
துதித்துகற்பனை சொன்னயம்பொருணயம்
மதித்திடுமிசாக வகையெலாஞ்சிறப்ப

சிறப்புப்பாயிரங்கள்.

நவிற்றிய கீர்த்தனு ரஞ்சிதநாவிப்
புவிக்கமுதாமெனப் புந்திகொண்டுன்புவீஇத்
தாயின்பூறுவ துலகின்புறக்கண்டு
காமுறுவர்கற்றறிந் தாரெனற்கிலக்காய்
பல்லாருங்கொள் பாக்கச்சியற்றினன்
நல்லோர்நாவெலா நாளுந்துலக்குவோன்
ஐந்திணைவளனு மான்றபல்குடியு
நந்தலிற்செல்வமு நாளும்பெருகும்
ஐயன்பெட்டையி லமருஞ்செல்வன்
மெய்யன்புடைய விற்பனசிரேட்டன்
துங்கம்பெறுமப் துல்கனிசாகிபு
சிங்கநாதிப ஜெயமிருக்கோனே

இஃது

மதுரைத் தமிழ்ச் சங்கவித்வான் - கீழக்கரை

ஸ்ரீமத். செ. மு. செய்யிது முகம்மது ஆலிம்

அவர்களியற்றிய

நிலைமண்டில வாசிரியப்பா.

பூமலிவாரிப் புறந்தொறுமுழங்குங்
காமலிநறவங் கவின்முகக்கழனி
வயின்வயினிறைய வளவியபைங்கூழ்
செயிர்நறுபூரினர் திருவெணகிமிர்ந்து
நன்றிசேர்திருவார் நனிவினைவிழைந்து
அன்றுவிதத்திருவென வறநெறியொழுகுந்
தவனறிவிதயா சனத்தினர்பணிவிற்
றவனெறிபரவாத் தனியுலகூட்டுங்
காவிரம்பதிவாய் கவினுறத்தோன்றிக்
கோகிலத்துடைவைக் குணகரைவதிந்தோர்
அறந்திகழ்மக்கத் தவிதாராக்கனலைப்
புறந்தலைகரத்தார் புனல்கொடுதவிர்த்தோர்
சுலைமானெனுமிதந் தூய்தவச்சுதனார்
கலைவழிவிரித்த கருணையம்பெருமான்
வெஞ்சிலைகளையு விளம்பியநாவார்
நிஞ்சைமீக்காயில் விழைவுறுமவையார்
அஃகியமொழியா னரும்பயனுகுத்து

வெங்கியரித்திய வித்ரியாவியற்றினர்
புத்தகமிலெனது பலமனத்திருத்தும்
சதீக்கத்துல்லாவொலி சாகிபுபௌத்ரர்
கதிர்மதிசுண்ணக் கறண்டகமுதவுங்
கதியுமிஞுலியார் கருதியிமகவாம்
ஜக்காலலது வணித்திலார்வகுதைத்
ணைதக்காஸாஹிபு தகைதிருமரபோர்
அறபுந்தமிழு மறந்திகழ்வனவும்
துறவும்பிறவுந் தொகுத்தினிதுணர்ந்தோர்
வரம்பிகல்கேள்வி நிரம்பியமதியார்
அரம்பையர்புனையு மலங்கல்மார்பினர்
கானன்னபன்பர் நடுநிலைபிறழார்
மேன்மாந்தகையார் முகம்மதப்துல்லா
லெப்பைஆலீம் நிமலனன்மொழியால்
செபீயபாகுந் தேன்பிறகடுப்ப
வர்த்தனொருநா லஃதுறநாமம்
சீரத்தனுரந்தங் கிளரொளிமணியைப்
பயன்மரமுள்ளூர் பழுத்தெனத்திருவார்
அயன்முறையுன்னு ருமருந்தன்னார்
ஜயன்பேட்டை யருணிதிச்செல்வன்
அப்துல்கனியெனு மருள்பெறும்வள்ளல
ஒப்பிலாநிதிகொண் டுலகங்களிப்ப
அருங்குன்றிலெக்கென வச்சிலியற்றினன்
பருவரலகன்றிரு பதியிலும்வாழி.

இஃது
திருநெல்வேலிஜில்லா. செல்வமாநகரம்
இயற்றமிழ் வித்துவான்
எம். எ. நெயினுமுகம்மதுப்பாவலரவர்களால்
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒருமுதல்வற் றடங்கருணை யடைகிடந்த பெருக்கெடுமா யுலகமிதன்
திருமுதலாய் மெய்ம்மார்க்கப் பைங்கூழிற் கருமகிழையா நீரும் மக்கள்
மருவூதன்மை நகர்வந்த நபிகள்பிரா னங்கள்பிரான் மலங்கமுஇய
குருமுதல பல்லொலிமார் துணைகழல்கட்கணைகழலாக் குறித்து மாதோ. (1)

உ

சிறப்புப்பாயிரங்கள்.

கற்கண்டு சருக்கரைமுக் கனிரசத்திற் கோற்றேனைக் கலந்து கூட்டி
யற்கின்டி மத்தித்த மதுரத்திற் கெண்மடங்கா யதற்குமேலாஞ்
சொற்கொண்டு கீர்த்த நாஞ்சிநமென் றொருபுதுநா லுலங்கு மாறு
வெற்கண்டவகன் வெளிக்கி ழருளினு னவனாயின் டியும்பக் கேண்மின் (2)

கலனெடுத்த மடவரல்க ளிளமேனிற் கலகமுறக் கலந்த சோலைத்
தலனெடுத்த தென்காயற் பதியுடை யார் மயிரயினுர் தனிவெண் கீர்த்தி
கலனெடுத்த சுற்றணிபோன் குறுப வநக் கத்துல்லா காத நாதர்
குலனெடுத்த ராஜசலை யான்லெப்பை ஆலிமுள்ளங் குளிர்ந்த பாலன். (3)

முன்னிலைமை குத்புஸ்மான் தைக்காசா ஹிபுவிழைத்த முழுமுத்தான
மன்னிலைமை குருநாத ரென்போல்வார்க் கிருமிதியார் மகத்தி ருன்ற
தன்னிலைமை மெய்க்குமுகம் மதுஸாலி கெம்பெருமான் றகுதிக்கான
தன்னிலைழும் செறிபிடித்த கலிபாவென் றுலகமது நவிற்றுஞ் சீரான். (4)

பொன்னிவர்த்த மலைமுகிவன் றமிழியலும் பாடைகளுட் பொருவில் லாத
சொன்னிவர்த்த அறபியலும் பெரிதோர்ந்தி யாதத்துச் சமுண நீதி
மின்னிவர்த்த வருந்தகைசா லாலிமெனும் பட்டமதா லிலங்கப் பெற்றுட் 1
புன்னிவர்த்த தன்னரண் ணியம்போலத் தழைத்துயர்த்த புநிதச் சான்றோன்.

வெண்முத்திரத்திரநட் பாராய்ச்சி யின்றெழிலோன் மிளிர்வெகுஹமதின்
உண்முத்தி ஞட்டமெலாந் தேட்டமதாக் கண்டடங்கி யொருமைசார்தித்
தொண்முற்ற வெளிசடந்த மெய்ஞ்ஞானி யெஞ்ஞான்று முயர்ந்திட்டாருங்
கண்முத்துக்கர முகம்ம தப்துல்லா லெப்பையெனுங் கல்விமானே. (6)

இத்திறத்த விதரணனேற் றிந்நூலை யரங்கேற்றி யச்சிலேற்றி
முத்திழைத்த பதக்கம்போற் பூப்பரப்பிற் படர்வித்தார் மொழிவின்கேண்மின்
வத்தகத்தி லிலங்கை யெலாம் வணக்கிநிற்கு மாட்சியுளார் மதிமெய்ஞ்ஞான
வித்தகத்தி னுக்தேர்ந்துத் தவத்திருந்துப் பிணைக்கறுத்த விதிமிக்குள்ளார். (7)

பொருமைகொடுத்த காயமதின் குக்குமமாம் விதமனைத்தும் போதித் தெற்குக்
கைகொடுத்த கயசுவொளி நிலைகாட்டிக் காத்துதவுங் காமிலாசான்
செய் கொடுத்த வைமூனகர் காதிறுசாகிப்பெற்ற செல்வத் தோன்றல்
ஐகொடுத்தீ கொடை அப்துல்சுனிகூகி யென்றுயர்ந்த வருட்சீமானே. (8)

பிஸ்மில்லாஹி.

சாற்றுக்கவிகள்.

இஃது

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான் - கீழக்கரை ஸ்ரீமத்
பா. பு. ச. சுல்தான் அப்துல் காதிறு புலவரவர்கள்
இயற்றியது.

வெண்பா.

பூட்டு முயர்சகனப் பூவகுதை மாநபியன்
பூட்டு முகம்ம தப்துல்லாவின்—பாட்டகமா
சங்கீர்த்த னாதமு மாருளை யுய்க்குமாம்
சங்கீர்த்த னாஞ்சிதம்.

இஃது

காயற்பட்டணம் வித்வசிரோமணி
செய்யுத்தீன் புலவரவர்கள் புத்திர். ஸ்ரீமத்.
செய்யிது முஸ்தபா புலவரவர்களியற்றியது:

கட்டளைக்கலித்துறை.

துதிபூத்த ஷெய்கு சதக்கத் துல்லாவழித் தோன்றலர்பின்
மதிபூத்த காஹிர் முகம்ம தப்துல்லா மகிழ்ந்துரைத்த
விதிபூத்த சங்கீர்த்த னாஞ்சிதத்தை விழைந்து கொள்ளக்
கதிபூக்கும் நெஞ்சங் களிக்குந் துயரங் கரைந்திடுமே.

இஃது

திருப்புத்தூர் - அருள்வாக்கி
ஆ. பி. அப்துல் காதிறு புலவரவர்களியற்றியது.

கட்டளைக்கலித்துறை.

சீர்கொண்ட செய்கு சதக்கத் துல்லாவொலி செல்வர்தங்கள்
பேர்கொண்ட நன்மர பார்ந்திடும் பேரன் பிரபல்மாய்த்
தார்கொண்ட முகம்ம தப்துல்லா லெப்பைசொற் சங்கைமிக்க
பார்கொண்ட வின்பப் பதங்களைக் கேட்பர் பவமறுமே.

சாற்றுக்கவிகள்.

இஃது பேட்டை
ஸ்ரீமத் திவான் பீர்முஹியித்தீன் ராவுத்தரவர்கள்
இயற்றியது.

வெண்பா.

ஆக்கமுறு மக்கநகர் பூபதிமுகம் மதுவின்
மாக்கமலப் பாத மனத்திருத்தும்—பாக்யன்
முகம்ம தப்துல்லா முதிர்ஞான னீந்தான்
திகழ் கீர்த்தனை ரஞ்சிதம்.

இஃது
காயற்பட்டணம்
கடாகம் கடல்வொலி நாயகம் காசீம் புலவரவர்கள் பௌத்ரரும்
இந்நூலாசிரியரின் அத்தியந்த மித்ருருமாகிய
ஸ்ரீமத். புலவர்.
முகம்மது அப்துற்றகுமான் லெப்பை ஆலிமவர்கள்
இயற்றியது.

அறுசீர் விருத்தம்.

கற்றவர் புகழும் கீழக்கரை யொளிர் சதக்குநாதர்க்
குற்றகாள் முளையாய் வந்தவுயர் முகம்மது அப்துல்லா
சொற்ற சங்கீர்த்த னரஞ்சிதமது துலங்கு வாய்மை
பெற்ற பேரீதத்திற் சாரப் பெரும் பதமளிக்கு மாதோ.

இஃது
மாநிஹாற்றகுல்
ஷெய்குஸதக்கத்துல்லா நாயகம்
அவர்கள் பௌத்ரர்
கீழக்கரை ஸ்ரீமத்
க. வி. செ. அஹமதுஜலாலுத்தீன்ஸாஹிபவர்கள்
இயற்றியது.

வெண்பா.

சங்கவொலி நாதர்சதக்கத்துல்லா பௌத்ரர்
தங்கமுகம் மதப்துல்லாவின்—தங்கு
மிதத்தை மகிழ்த்து மெழில் கீர்த்தனரஞ்
சிதத்தை நிகர்ப்பதெவனே சேர்ந்து.

முற்றிற்று.

கீர்த்தனரஞ்சித முதற்குறிப் பகராதி.

பிஸ்மில்லாஹி.

கீர்த்தனாஞ்சிதம்.

காப்பு.

குறள் வெண்செந்துறை.

சீர்த்த மெய்க் கடவுளின் றிருநாமங் கொண்டு
கீர்த்தனா ஞ்சிதங் கிளத்துவன் யானே.

வெண்பா.

உலகம் படைத்த வொருபுனிதற் கென்று
மிலகுபுகழ் நான்கு மெய்க—நலவே
குலவு நபிகுழுவோர் கோதிலன்பர் மீது
சலவாத்தி னேடுஸலாம் சார்ந்து.

இஃது

உலகரக்ஷகர் நபிகள்பிரான்

முகம்மது முஸ்தபாறசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்மீது

விருத்தம்.

திறனுறும் பொறிகள் யாவுந் திகழ்வழி யொழுகு மாறு
மிறலெனு மறிவின் யார்த்து விடமென விளைந்த மூன்று
மறமற வொருவி னோர்தம் மனக்கொலு வமர்ந்த சோதி
யுறமென வுதித்த நாத ரகுமனைத் புகழு வேனே.

(சித்திரகவி.)

கட்டளைக்கலித்துறை.

மை	நி	னை	ந்	து	நி	னை	ந்
னும்	யா	ல்	ய	பை	வே	து	ம
வெ	னீ	ர்	த	ம்	ப	ம	கு
லா	லு	னி	த	ர	யா	தை	மீ
ர்	க	ளு	த	ர	வோ	ர	க
டோ	ண்	வி	மை	ரு	வ	ரெ	யா
வ	த்	தி	ர	த்	தோ	ரு	ய்
தே	நீ	ர்	யீ	மை	சி	ட்	மா

மையார் தரவரு மாட்சிமையீர் நீதே வத்திரத்தோ
ருய்யா ரெவருமை விண்டோர் களுதா வோரகமீ
தையா ரதனி லுலாவெ னீர்தம்ப மகுமதுவே
பையல்யா னும்மை நினைந்து நினைந்து பரதவித்தே.

பதம்.

இராகம் - மோகனதோடி - அடதாளம்.

பல்லவி.

பையல் யானுமை நினைந்து நினைந்தே நிதம்
பரதவிக்கிறே னுதா.

அநுபல்லவி.

வையகம் புகழ்ந்தேத்து மக்காபுரத் தப்துல்லா
செய்யும் தவத்தால் வந்த செய்யிதகு மதேயிப். (பை)

சரணங்கள்.

(1) வஞ்சி மயலான் மிக வஞ்சிச்சஞ்சலத்தோடு
கெஞ்சி யழுதும் நெஞ்சங்கொஞ்ச மிரங்கவில்லை

பஞ்சை ஸெயினபு செய்
நஞ்சை யருந்தி னேரே
தஞ்சந் தஞ்ச மென்றுங்கள்
கஞ்சப் பதந் துதிக்கும் (பை)

(2) வண்டு நிகர் விழிகம் கண்டு நிகர் மொழியும்
வீண்டு நிகர்ப்புயமுங் கொண்ட நபியே யும்மைத்
தொண்டனென் கண்குளிரக்
கண்டு கவலைகளை
விண்டுநற் கதிபெற
மண்டு தண்டஞ் செய்கின்ற (பை)

(3) நாடி யுருகி மனம் வாடி உடலமெலிந்
தோடி யாநந்தக்கண்கள் தேடி மதுரகவி
பாடி வருமெனை நீர்
கூடிக் கலந்தேயுற
வாடிக்கிருபை செய்யு
நீடிய கால மிந்தப் (பை)

(4) நாதா திவ்யவரப்ர சாதா வரமருள்ச
மேதா சமயமிது போதா தென்றோ விப்பூவில்
வேதா அப்துல்லா வென்மேல்
வாதா விறை வன்றிருத்
தூதா மதீன மகு
மூதா வெந்தாதா விந்தப். (பை.)

பதம்.

இராகம் - பூபாளம் - திரிபுடை - தாளம்.

பல்லவி.

அதிரூப மதிமுக வழகார்ந்தக் காசுநிகாண
ஆசை கொண் டேனுனையா.

அநுபல்லவி.

மீதிக்கும் பல புவனந் துதிக்குங் காரணமான
மஞ்சு தினசரி மஞ்சரி மைச்சொரி
இன்சொன் மறை விரி விஞ்சை பயில்புரி

கீர்த்தனாரஞ்சிதம்.

வானர்சூழ் மதின
மாநகரின் பூபதி
தானவன் றிருத்தூத
ரானமுகம்ம தேநும். (அதி)

சரணங்கள்.

(1) கண்டோ மொழிமலர்ப்பூஞ் செண்டோ வுபயபாதம்
விண்டோர் காமுலகத் துண்டோ வுமக்கு நிகர்

மண்டலத் தோர் விண்டலத்தோர்
என்றுந் துதித்து நயங்
கண்டு தினந் தினமுந்
தொண்டு செய்வா ரநேகம்

மண்டலந்தனிற் றோயாப் பாதரே
விண்டிடற்கரி தான போதரே

கொண்டலிடுங் குடை மண்டலிகருங்கள்
கொங்கு காதமிக்கமழும் பிர பல்யரே
சங்கமாம் நபிமார் களின் றுங்கரே

அங்கமெய் நிதியே
சங்கைநன் மதியே

வானர்சூழ் மதினமா நகரின் பூபதி
தானவன் றிருத்தூத ரானமுகம்மதேநும் (அதி)

(2) கானின் வலையிலுறு மானைப்பிணை விடுத்தக்
கானன் றனைச்சிறந்த தினில் வருத்தினோரே
கோனின் றசைப் பெண்ருப மாக வெழில் கொடுவ

மானஞ் சொல வரிய
தாக்கு முகம்ம தே முன்

வானேழுங் கடந்திறைமுன் சென்றோரே
பானுவை அலிக்காய் வர விண்டோரே

ஈனைபூஜகில் சேர்ந்மடிய விம்
மாநிலந்தனின் மணை லெறி நாத்ரே
மேனியே ரொளி மிகும்ப்ர காசரே

வீர னொளி தானும்
வடிவினால் காணும்

வானர்சூழ் மதின மாநகரின் பூபதி
தானவன்றிருத்தூத ரானமுகம்ம தேநும் (அதி)

(3) நந்தா வனமிகவ டர்ந்த வளம் புடைசூ
ழந்த கனிவகைய நந்த மெங் குஞ்செறியுஞ்

சந்தமது சிந்துமக் கா
சுந்தர விறை அப்துல்லா
சொந்தப் புதல்வரென
வந்தே யுதித்திப் பூவில்

சிந்தை விணைந்து முபதேசரே
செந்திருவா மினுதரு நேசரே

இந்தவிப் பூதலம் வந்து பணிந்துபி
னந்தரமீதி னிற்செல விண்டோரே
விந்தைகள் விளங் கப்புவிகொண்டோரே

சந்தத மப்துல்
லாவெனக் கருளும்
வானர்சூழ்மதின மாநகரின் பூபதி
தானவன் றிருத்தூத ரான முகம்மதேநும். (அதி)

பதம்.

இராகம் - தேசிகம் - ஆதிதாளம்.

பல்லவி.

கனக மலர்ச் சரண மென்றே
கண்டு களிப்புற் றானந்த மடைவேன்.

அநுபல்லவி.

கனிபல சிந்திடும் கதலி பலாத்தேன்
கனிமா தனை மா வெங்கு நெருக்கக்

கந்தி பந்தி யநந்தங்களோடு
காவுசூழ்மதி னுவாழுகு மதேமுன்
வா - ரீ - ரே - தோ. (கனக)

சரணங்கள்.

(1) சட கிழற் சாயாதரை வயின்றோயாச்
சரணஞ் சரணமடைந்தேனிறை நேயா
சந்தி சந்தியாய் ஜனத்திரள் காணத்
தாலமீது மதிவகுத்த சகாயா முன்
வா - ரீ - ரே - தோ. (கனக)

(2) ஜெகம்புகழ்வாசா திருமெய் ப்ரகாசா
தினமெனக் கருள் புரிவீர் மகராசா
சிந்தைத் துயரறச் சிந்தித் தேனென்று
நிதனை மனச் சேயே னநுதினமுன்
வா - ரீ - ரே - தோ. (கனக)

(3) அரியவன் னாதா அறுஷேறும் பாதா
அருமறையோர் தினம் போற்றும் ப்ரசாதா
அந்திசந்தியு மமரர்கள் வாழ் மக்கா
அப்துல்லா புதல்வரே அப்துல்லா வென்முன்
வா - ரீ - ரே - தோ. (கனக)

பதம்.

இராகம் - சங்கராபரணம் - திரிபுடைதாளம்.

பல்லவி.

சரணாபரனோடிறை அருஷிற்சென்றோரைநானெத்
தருணம் வரக்காண்பேனோ.

அநுபல்லவி.

பரனருள் பெறுமதி பதி அப்துல்லா சந்ததி
தாரணி புகழ்மதினா புரியில் வாழ்படி தோயாச். (சர)

சரணங்கள்.

(1) மிகு வஞ்சக் கொடுமை செய்க் கஞ்ச னெனைமன
தஞ்ச லெனவேந்தற் காக்கவும் - இன்னும்
வணக்கஞ் சற்று மற்றுப் பிணக்க முற்று முற்று
மருள்வோ னெனைக்கரை சேர்க்கவும்

சஞ்சலத் துகிலணிந்து
சதியு நிஷ்டே நீடியும்
சந்த மிகுந்த கந்த மணம் பூசுந்
தைய லுடனுற வாடியும் - கொஞ்சி
சரச மிஞ்சும்பய லின்சஞ்சல
மகல வொஞ்சி நீ

தஞ்ச மவ ரெனக்
கெஞ்சு வாய் மட
நெஞ்ச மே கமழ்
செஞ்ச ரோரு கச் (சர)

(௨) உயர் கந்தரமிகு வந்தனத் தொடு
வந்துதருங் குடைகொண்டவர் - முற்றுங்
கருணை யுற்றமுத்தர் மருளேயற்ற சித்தர்
கருது நபிமறை விண்டவர்

சுந்தரக் கொடையின் கீர்த்தி
துலங்கு மெய்யெழில் நீடியும்
சுற்றி லுற்றவர் பெற்றிடக் காதஞ்
சுகிர்த மாநறை வாடையும் - சந்தி
ரனது முந்தி தனிலே வந்திரு
கரம் புகுந்ததும்

முந்த நபியிலு
யர்ந் தோரா மென்ற
றைந்த மொழி கேட்ட
நந்தர் பணிந் தெழுஞ் (சர)

(3) குளிர் தண்டல் செறி சோலை யெண்டிசையு முறு
கின்ற வனமிகு சூடுமே - அந்தத்
தருவில் மயிலினங் குயிலு மாடதத்தைத்
தம தென்றிரா கம் பாடுமே

தண்டு இன் மது வருந்தி
வண்டினங் குழ லூர்துமே
மந்தி மிகுந்த வடர்ந்த சினைமிசை
குந்தி போடு மெப்போதுமே - என்று

மமரர் தொண்டு செயுலல் மண்டப்
பிருக்கின்ற மக்க

மாண்ட வப்துல்லா
ஈன்றிடுஞ் சுத
ராண்டகை யெனவே
தோன்று மவரிரு (சா)

பதம்.

இம் - சௌராஷ்டம் - ஆதிதாளம்.

பல்லவி.

எப்போதா மிரங்குவீர்
ஏகன்றூதே யென்மீதில்

அநுபல்லவி.

மெய்ப் புகழிறை நேயா மேதினிபாதந்தோயா
மெய்யரே - ஐயரே
விமல மலர்ப் பாதரே (எப்போ)

சரணங்கள்.

(1) பாதந் தந்தென்னைச் சேரும்
பாவ வினையைத் தீரும்
காத காதங் கமழுங் கஸ்தூரி மெய்திகழும்
கத்தரே - சுத்தரே
கருணை நபி நாதரே (எப்போ)

(2) தஞ்ச மென்றும்மை நாடி
தாரணி யெங்கு மோடி
நெஞ்ச முருகு மிங்கநேசமென் முகம் பாரும்
நீதரே - வேதரே
நேச மருள் போதரே (எப்போ)

(3) மாமக்க வதி காரா
மன்னப் துல்லா குமாரா
சேம முறவே நித்தம் சிந்தித்தப் துல்லா சித்தந்
தேடுதே - வாடுதே
ஜெம்மல் முகம்மதுவே. (எப்போ)

பதம்.

இராகம் - குறிஞ்சி - ஏகதாளம்.

பல்லவி.

எப்போ வந்தாள்வீர் - துரையேகீர்
எப்போ வந்தாள்வீர்

அநுபல்லவி.

முப்புவி போற்றரசே முதலோன்றா தர்சிரசே
இப்புவியி லன்பு வைத்தென்
சொப்பனத் தாயினு நீர் (எப்போ)

சரணங்கள்.

(1) அங்கங் கஸ்தூரி - கமழ்ந்திடு
மெங்கு மொய்யாரீர்
மங்குல் குடை நிழற்று
மன்னே ஹபீபு போற்றத்
திங்கள்தனைவகுத்த செழ்யிதகும தேகீர் (எப்போ)

(2) அம்பரங் கடந்தீர் - கபுஷோடு
அறுஷினில் நடந்தீர்
உம்பரிம்பர் பரவுஞ் சம்ப்ரம வதிகாரா
தம்ப முமையே யென்று
நம்பு மென்றுன் பந்நிர. (எப்போ)

(3) மாமக்க வூரா - அப்துல்லா
மன்னர் குமாரா
பூமி மீதடி தோயா
புகழப் துல்லா சகாயா
நேமிநாயக மான ஹாமிதகு மதேகீர் (எப்போ)

பதம்.

இராகம் - காண்டா - ஏகதாளம்.

பல்லவி.

தையலேயென் மையன் மீறுதே
தாஹாநபி மீதே - எடி.

அநுபல்லவி.

துய்யன் றிருத்தூதராய் வந்துதித்திடும்
வையம் புகழ் மெய்யரிந்தப்
பையற் கருள் செய்ய கிதக் (தை)

சரணங்கள்.

(1) காசினியி லமவாசி மதியதை
காத்தி முல்லன்பியா - எடிகாசினி
தேசராஜர் போற்றும் ஹாஷிம் குலத்தில்வந்த
காசிம் யாஷீன் தாஸீனொனும்
ராஜனைக்கவ் காணா விளங் (தை)

(2) சந்த்ர வடிவினுஞ் சுந்த்ர முகமேனி
சாந்தங் கமழ் பூவாம் - எடிசந்த்ர
கந்த்ரங் குடையிடு மந்த்ரர்க் கிறையென்முன்
வந்துவந்து கந்தப்பாதஞ்
சொந்த மாழ்த் தந்தாள விளங் (தை)

(3) கன்னல் கமுகொடு செங்நெல் விளைமக்கா
மன்னரப்துல்லா - எடி கன்னல்
அன்னலவர் மகவின்னும் வரக்காணோன்
பெண்ணே கண்ணே
மின்னே யிதற்
கென்னசெய்வே னப்துல்லா வென் (தை)

பதம்.

இராகம் - பைரவி - அடதாளம்.

பல்லவி.

ஐயாகிதமுங் கண்மேல் மைய்ல் பெருகிவாடும்
பையற் கிரங்கி யருளும்
தாஸினே யுமை நம்பினேன்.

அநுபல்லவி.

வையம் புகழ் மீனு துய்யரே தங்கட் கிருபை
செய்யாதிருக்க லாகுமோ
தாஸினே யுமை நம்பினேன் (ஐயா)

சரணங்கள்.

(1) பஞ்ச பாதக மிஞ்சி யஞ்சி ப்ரதாபத்துடன்
செஞ்சினும் தாமத மோ
தாஸினே யுமை நம்பினேன் (ஐயா)

(2) சூரர்கள் கவிகை கொண்ட காரணரே நீரல்லால்
வேறுரிடத்திற் சொல்லு வேன்
தாஸினே யுமை நம்பினேன். (ஐயா)

(3) தக்க புகழ் படைத்த மக்கா வப்துல்லா பாலா
மிக்க அப்துல்லா துதிக்கும்
தாஸி னேயுமை நம்பினேன். (ஐயா)

பதம்.

இராகம் - கமாஸ் - இரக்கம் - சாப்புதாளம்.

பல்லவி.

என்னுளத்திலுறை மகுமூத ரே
இணையில்லான் திருத்தூதரே.

அநுபல்லவி.

பொன்னக ரென்னு மக்கா மதினாவுக்கோர்
புண்ணிய ராய்வந்த போதரே
சொன்னமாமல ரென்னுக்தா ளையிச்
சின்னனுக் கீந்திடா தென்ன தாமதம். (என்)

சரணங்கள்.

(1) அல்லும் பகலு நினைந்துருகி யழுமிந்த
அடியேன் மீதரு ளில்லையே
ஐயையோ வுமையல்லா தினியென்னை
ஆதரிப்பவ ரில்லையே
வல்லிய ராசை மனத்தள வில்லையே
வடுவற மருந் தில்லையே
வடிவுறுந்தலஞ் செய்வதற் கென்மனம்
வருந்தி முயல்வு மில்லையே
சொல்லவே தொலையாதென்றன் றொல்லையைத்
தொகுத்து பேரறி வில்லையே
சொப்பனத் தேனு மிப்பு வியின்ம
ணப்பிரியவு வப்பொடே வாரும். (என்)

(2) மஞ்சு குடை நபியே மண்டோயாப்பாத
 மாமலரைத்தின நாடவும்
வாரு மென்றுயர் நீர வோருரை
 தாரு மென்றே மனந் தேடவும்
நெஞ்சில் கறளது மிஞ்சியே நீடுதே
 னேர் செய்தும் பால் போடவும்
நெடியோன் திருவரு ளியவே யிந்த
 நேரமதுக்ர கஞ் சூடவும்
இன்சொலுறுங்கவி காவது பாடவும்
என் மென்று மெய்க் நொந்து வாடவும்
 பஞ்ச பாதக னென்செய் வேன்பல
 சஞ்சலங்கெடத் தஞ்சம் வேறிலே. (என்)

(3) அழகொளிர் சுந்தரவ ரம்பையர் குழ்மக்கா
 ஆட்சிய ரப்துல்லா பாலரே
அவனி தனிலாரும் போற்றும் பெண்ணர
 சாமினு பெற்றீன்ற சீலரே
குழகு கஸ்தூரி மேன்மை மேலரே
 கோர்வைக ளுக்கெலா மூலரே
குணநிதி நபிமார்கள் யாவர்க்குங்
 குருவாய் வந்த செங் கோலரே
நிழலதே தெரியா வறுகூலரே
நிறை கொடைக் கைவிசாலரே
 நித்தனின்பரி சுத்தரே பிர
 சித்தரேயிந்த அப்துல்லா வெனும். (என்)

பதம்.

இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

மின்னே மன்ன னன்னபி யென்
 முன்னே வாராரோ
கண்ணே யென்றன் கனவில் வந்து
 கவலே தீராரோ.

அநுசரணங்கள்.

(1) பெண்ணர்சே யின்னும் வரா　　தென்ன ஞாயமோ
என்ன செய்வே னேழையானி　　தெவரின் மாயமோ (மின்)

(2) ஓடிக்கழ னுடிப்பதம்　　பாடுறே னடி
தேடியுள்ளம் வாடி நிதக்　　தியங்குறே னடி (மின்)

(3) ஏங்கிமன மீங்கழுது　　மிரக்க மில்லையே
பாங்காயவ ரென்றன் முகம்　　பார்க்க வில்லையே (மின்)

(4) சுத்தரையான் கண்ணுல்　　தரிசிப்ப தெந்நாளோ
சித்தம் வைத்தென்புன் வினையைத் தீர்ப்ப தெந்நாளோ (மின்)

(5) அஞ்சு மெனக் கஞ்சல்சொலற்　　காருங் காணேனே
என் செய்வேனி தென்பிழையோ　　ஏதுந் தோணேனே (மின்)

(6) மக்கமா நுமினு பெறு　　மைந்த ராமடி
தக்க புகழோ தப்துல்லா　　சகாய ராமடி. (மின்)

பதம்.

இராகம் - ஹிந்துஸ்தானி - மிசர தாளம்.

பல்லவி.

ஆவலாகினே னுன்　　வாடி
அன்ன லேநும் பாதந்　தேடி.

அநுபல்லவி.

மாவளஞ்செறிமதினு மன்னரான நந்நபியே. (ஆவ)

சரணங்கள்.

(1) மண்டல மெங்கும் புகழு
மாநிலத்திற் ரேயாப் பாதா
வண்டனுன் படுந் துயரத்தால்
வாடுறேனு னென்ன செய்வேன்　　(ஆவ)

(2) வஞ்ச னிபு லீசா னவன்
வாட்டு கிரு னென் வுன்னை
தஞ்ச மென் றுமை நம்பி வருந்
தாசனைக் கண்பாரு மையா　　(ஆவ)

(3) மஞ்சு தவழுஞ் சோலை சூழ்
மக்கா அப்துல்லா குமாரர்
கீஞ்சப்பா தந்தத் தப்துல்லாவைக்
காத்தருள் முகம்மதுவே (ஆவ)

பதம்.

இராகம் - காந்தார [illegible] ஏகதாளம்.

பல்லவி.

ஆசை மீறுதே யெனக்குஞ்சோருதே
வடிசமது வீசும் பொற்றுள் தனைத்தேடி.

அநுசரணங்கள்.

(1) தேசராஜரைத் - தெறு - பாச நாசரை
காசி னியிலென் முனெப்போ காண்பனடி (ஆ)
(2) வாரிபோற் கண்ணல் - மழை - மாரிபொழிகிறேன்
பாரிற் ரேயாப் பாதந்தேடிப் பரதவிக்கிறேன் (ஆ)
(3) வானின் முழுமதி - யீர - வகுக்கும் பூபதி
தானவன் றிருத்துதர் பாதத் தரிசனம் பெறவே (ஆ)
(4) வீரிசூழ் மக்கத் - தப்துல் - லாவருளே மிக்க
பூவி லப்துல்லா துதிக்கும் புண்யரைத்தேடி (ஆ)

பதம்.

இராகம் - கமாஸ் - மோகனதாளம்.

பல்லவி.

ஆவிதியோ ஐயையோ விதென்றன் கெதியோ.

அநுபல்லவி.

வாவிசூழுமதினவிலமைந்தரசாளுமுகம்மதுவே-உம்மைப்
பாவிதுயர் தீரப் பாரிலொரு முறை
பாரா தென்விதியோ (ஆவி)

சரணங்கள்.

(1) கானன் வலைப்பட்ட மானை விடுத்துன
மானைத் தரு பிரியே - என்றன்
ஈனமறக் கன்வேனு மெனதுகண்
காணும லேங்குவனே (ஆவி)

(2) வானின் முழுமதி வந்து சலாமுரை
தந்தமு கம்மதுவே - பெரும்
கானலை நீரென மானுமலைந் திடும்
காதைக்குள் ளாகுவனோ (ஆவி)

(3) வஞ்சி யெயினபு நஞ்சை யருந்திடும்
வாகுறு மெய்ந் நபியே - மாய
வஞ்சியரான் மனதஞ்சி வருந்திடும்
வஞ்சக னாகுவனோ (ஆவி)

(4) மஞ்சுகுடை செய்மன் மீதடி தோயாத
மன்னர் முகம் மதுவே - மிகு
சஞ்சலத் தோடியான் கெஞ்சத் தினமுங்கள்
நெஞ்ச மிரங்கலையோ (ஆவி)

(5) எல்லா முமக்கென் றேக னமைத்திட்ட
சல்லாப னன் னபியே - கரும்
கல்லிற் றடங்கெதரி காரணரே நீரென்
கண்முன்வர வரிதோ (ஆவி)

(6) வல்லோ னறுஷினில் வாகாய் கபுஷுடன்
சென்ற முகம் மதுவே - தினம்
அல்லும் பகலுமென் னல்லலை நாவினுஞ்
சொல்ல முடியலையே (ஆவி)

(7) கஸ்தூரி வாசங் கமகமன வீசும்
ஹாமீமெனு நபியே - என்ன
வஸ்துவை யெல்லா மறிந்துந் தேவரீர்க்கின்ன
மிஷ்டம் வரவிலையோ (ஆவி)

(8) பஸ்திரியிலுயர் மக்கா வாழப்துல்லா பெறும்
வள்ளல் முகம் மதுவே - மிக
கஸ்திப்படு மப்துல்லா வெனைக் காத்திடக்
காலமு மீதல்லவோ (ஆவி)

பதம்.

இராகம் - கர்நாடதேசிகம் - அடதாளம்.

பல்லவி.

சந்திரமுகத்தரிசனை
தாருந்தாஹாநன்னபி.

அநுசரணங்கள்.

(1) சுந்தத•முமை நினைந்தே
சிந்தையிற் றுய ரனிந்தே
வந்தனஞ்செய் யேழைக்குந் தாளைத்
தாருந் தாஹா நன்னபி (சந்தி)

(2) அந்தரங் கடந்திறை முன்
அறுவில் கபுஷோடு சென்ற
செந்தா மரைப்பத மிரண்டையுந்
தாருந் தாஹா நன்னபி (சந்தி)

(3) மக்கா அப்துல்லா சுபுத்ரா
வண்புக ழுய்துல்லா மித்ரா
எக்காலு மெனக்கநு கூலம்
தாருந் தாஹா நன்னபி (சந்தி)

பதம்.

இராகம் - மோகனதோடி - ஆதிதாளம்.

பல்லவி.

மன்னரைத்தேடி மயங்குறேன்வாடி
மங்கையேநானென் செய்வேன்.

அநுபல்லவி.

கன்னல் கதலி வாழை செங்நெல் விளை மதிஞ
நன்னகர் தனில் வாழும் (மன்ன

சரணங்கள்.

(1) அந்தர மதியு மமிர்த நன்னதியும்
அற்புதமா யமைத்தோர்
கந்தரக்குடையுங் கதிதருநடையுங்
காரணமாய்ப் படைத்தோர் (மன்ன

(2) சுந்தர வெள்ளிவுஞ் சொன்மிகத் தெளிவுஞ்
சயகுண மகராஜர்
சிந்தத நறை கமழு மெய்புடையார்
தானவ னருள் பெருகும் (மன்ன)

(3) வேட்டைக்குச் சென்றவொருவேடன் கைப்பட்டமானை
மீட்டி யருள் புரிந்தோர்
நாட்டி லுயர் மக்கா நகரப்துல்லா பெறு
நான் மறைப் புகழோங்கும் (மன்ன)

பதம்.

இராகம் - உசேனி - மோகனதாளம்.

பல்லவி.

பாதத்துணை நம்பினேன் - கொடும்
பாதகத்தால் வெம்பினேன்.

அநுபல்லவி.

மாதிரத்தோண் மாலையிற் பொற்றுகருந்தி சீதள்ச்சங்
கீதத்தொனி செய்மதினு நாதரகு மதுவேறும். (பாத)

சரணங்கள்.

(1) கத்தாறும் மெய்வாசமே - காத
காதங் கமழ் வீசுமே
அத்தனே மிகவசனித்த நபிநாதர் பரி
சுத்தராய் வந்தும் றேரேத
லத்தினிற் நடந்தோயா பொற் (பாத)

(2) வஞ்சி மயன் மிஞ்சுதே - என்ற
னெஞ்ச மெலிந் தொஞ்சுதே
பஞ்ச பாதகனுனென் பாவமகன் றேடத்தினங்
கெஞ்சிக் கெஞ்சித் துதித்தே
னஞ்சு குணக் கஞ்ச மலர்ப் (பாத)

(3) மக்கா அப்துல்லா பாலா - திரு
மாதா மினுவின் சீலா
திக்கெட் டோரும் புகழ ஹக்கனறு ஷேறு முயர்
சொர்க்கத் தரசெனு நல்மு
கம்ம தகுமது வேறும். (பாத)

பதம்.

இராகம் - வனமோகனம் - சாப்புதாளம்.

பல்லவி.

மன்னரேகீ ரிப்பூவிதனில்
வீந்திரங்கா தென்ன வாதையா.

அநுபல்லவி.

பொன்னகர் மக்காதன்னில் வாழு நல்
புண்ணிய ரப்துல்லா கண்மணியான (மன்)

சரணங்கள்.

(1) அம்பரமீதி லம்புலியன்தை யழைத்தற்புதம் விளைத்தோரே
அம்புயப்பத நம்பினேனுமை
சூடுமையெனையடர் கொடுமையீடேர்கெட (மன்)

(2) என்றுயரோடு நொந்துளம்வாடி யேழையானுமிகவருந்தியே
வந்தேனுகை மெலிந்தே னும்பால்பு
குந்துக்தயைபு ரிந்திட்டாகிலும் (மன்)

(3) மஞ்சுறுஞ் சோலை மிஞ்சுமென் மேலு மாமதினாவாழும் ராஜ
அஞ்சி யப்துல்லா கெஞ்சுறே னிந்த [ரே
அவனியி லென்றன் பவம் யாவுமற (மன்)

பதம்.

இராகம் - சாவேரி - அடதாளம்.

பல்லவி.

தாச னெனையாள வித்
தருணம் வரா தேதோ.

அநுபல்லவி.

நீசஞ்சருவ காசமறப்
பாசமதை நாடுதே. (தாச)

சரணங்கள்.

(1) மங்குல நிழற்றும்பீர் - சங்கரே வந்து
மங்கும்பசுந் தங்கமேவான்
திங்களை யழைத் தோரே (தாச)

(2) சந்ததமுன்மெலினைந்து சிந்தைத்துயரணிந்து
வந்தே னருள் தந்தே யென்னை
யெந்தா யுவந்தே (தாச)

(3) மார்க்கம்வளரும்வாவிசூழ் மக்கா அப்துல்லா பாலா
ஆக்கந்தர வார்க்கும் கண்ணால்
நோக்கு மப்துல்லா வென்னும். (தாச)

பதம், ௩௫.

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

சரணங்கள்.

(1) அதிபதியெனவந்த - அருமைநபியைத்தேடி
அலைகிறே னிப்புவியில் - அன்னமே (அதி)

(2) சதுமறைக் குருவான - சாதிக்குறைஷி மன்னர்
சற்றுமிரங்கா ரேனோ - அன்னமே (அதி)

(3) காத்திற் புனலழைத்த - காத்திமுலன்பி யாவைக்
கருத்தின் மறவேனே - அன்னமே (அதி)

(4) அருணனுட னுரைப - கர்ந்ததி ஜயம்விளை
அண்ணல்வாரா ரேனோ - அன்னமே (அதி)

(5) மெத்தப் பரதவித்து மெய்யுலர்ந் தலைந்திடுஞ்
சிற்றனென் செய்குவேனோ - அன்னமே (அதி)

(6) கத்தனருஷாம்ஹல - றத்திற்சென்றேனெப்போதென்
கண்முன் வரக்காண்பேனோ-அன்னமே (அதி)

(7) பெட்பானயகஜலம் - பிரளய மாயொலித்துப்
பேரலை போலாகுதே - அன்னமே (அதி).

(8) அன்பார்கவிதைபுகல் - அப்துல்லா மனமகிழ
அருளைவரக்காணேனே - அன்னமே (அதி)

பதம்.

இராகம் - தோடி - ஏகதாளம்

பல்லவி.

ஐயா வெனையாதரித்தருள்
செய்யா திருந்தா லென்செய்வேன்.

அநுபல்லவி.

துய்யவன் றாதேநுஞ் செய்யதாள்விந்தந்த்
தையமகற்று மெய்யா. (ஐயா)

சரணங்கள்.

(1) காரிருள்தனிலரியைக் கத்தனுரைப்படியேபூவில்
ஆருங்கண் காணும்படிக்கே முன்னேரில்
அழைத்த தராபதியே. (ஐயா)

(2) காதம் பரிமளவாசங் கமழுமேனிப்ரகாசாவிந்தப்
பூதலமீதிற்படாதபொற் பாதமிப்
போதளியு நன்னேசா (ஐயா)

(3) குங்குமப்பூம்பொழில்சூழுங்குணமுள்ளமக்காவாழும்புகழ்
எங்கும்ப்ரசங்கரெனுங் கோனப்துல்லாபெ
றுங்கண்மணியே நாளும். (ஐயா)

பதம்.

இராகம் - காமஸ் - திரிபுடைதாளம்.

பல்லவி.

சரணஞ் சரணஞ் சரணந்தந்தாள் குவிர்
சந்த்ரச் சுடர்முக சுந்தரரே.

அநுசரணங்கள்,

(1) கருமைக் குடையிடுங் காருண்ய திரேகப்
பரிமளக்காதமே கமழு மணத்திர்
கருத்தாவின்றிரு நேயா
கதமது புவிதோயாக்
காரணரே - பரி - பூரணரே (சரணம்)

(2) மாதர்கண் மாயவலைக்குள்யான்சிக்கி
மனநொந் துருகிவாடலானேனே
ஆதுலவன்றீனிக்கிப்
பேத மனைத் தகற்றும்
மாவலரே - யதி - காவலரே (சரணம்)

(3) மாவளஞ்சூழு மக்காவாழப்துல்லா
பனமீதுவந்த தவுச்சுதரே
பாவது புகழப்துல்
லாவென்னகயிகிழும்
பாக்கியரே - சுபீ - வாக்கியரே. (சரணம்)

பதம்.

இராகம் - காம்போதி - பண்தாளம்.

பல்லவி.

மாதவரேயின்னுமிரங்காததென்றன்
விதிவச மோ.

அநுபல்லவி.

ஆதி தேவன் றாதரே யுமை
யல்லாம லெங்கு செல் லுவேன்யான். (மாத)

சரணங்கள்.

(1) பாதியிராவேளையுடு பதியூழைத்தபாக்கியமே
ஆதவனடைந்ததையலிக் காகவேவெளி
யாகச் செய்யுநன் (மாத)

(2) எத்தனேயோஜென்மங்களின் இடரகற்றி னீர்தகவாய்
பெற்றதாய் பிதாவினிலும்
பிரியரேயருள்புரியாமலென்றும் (மாத)

(3) பாதமலர்சேர்வ தென்ருே பாவிதுயர் தீர்வதின்ருே
நிதகலும் பனுவலுரைச்
சேயனுனஅப்துல் லாவென்மீதினில். (மாத)

பதம்.

இராகம் - -நன்னியாசி அடதாளம்.

பல்லவி.

தருணமிதுவே கருணைசெய்தருள்
தாஹா - தவ - வாகா.

அநுபல்லவி.

வாகா - வுயர் - யோகா - நறுந்
தேகா - விறை - பாகா. (தருணம்)

சரணங்கள்.

(1) மதியையறியேன் செய்தகுற்றையோ
வஞ்சனென் றுதோ
றுதோ - விது - வாதோ - கன
திதோ - தனை - யேதோ (தருணம்)

(2) ஆசைமிஞ்சி யனவரதமும்
அலேகிறேனு தா
நாதா - மலர்ப் - பாதா - விறைத்
தூதா - மகு - மூதா (தருணம்)

(3) இன்னமென்றனே வெறுத்திருப்பது
மென்றலேவிதி யோ
விதியோ - எவர் - சதியோ - கால
கதியோ - என்றன் - மதியோ (தருணம்)

(4) மிக்கசெந்தமிழ்ப் புகலுமப்துல்லா
வினைதவிர் நேரா
நேரா - யென்முன் - வாராய் - துயர்
தீராய் - ஜக - மேரா. (தருணம்)

பதம்.

இராகம் - கர்நாடதோடி - ஆதிதாளம்.

பல்லவி.

தாஹாநபி தாளேமுத்திடா
தேசகியே னுன்.

அநுபல்லவி.

வாகைதரு - மாமக்காவாழ்
மன்னரப்துல்லாசேய் (தாஹா)

சரணங்கள்.

(1) மஞ்சு குடையிடு மண்ணிலடிதோயா
மன்னரே மானின்பிணைநின்றேரே
வஞ்சி ஸெயினடிசெய் கஞ்சாமமுந்துண்டோரே
பஞ்சவுல கிலென்
சஞ்சலமற. (தாஹா)

(2) வானின் முழுமதி வந்துபணிந்திடு
மன்னர் ஹபீயக மகிழவே
காணினதி யழைத்த ஹாமிதகுமதைக்
காதல்திர வொரு
போதாகிலும். (தாஹா)

(3) காவுசெறிமதி ஞவுக்கிறையெனும்
காவலரப்துல்லா பாலரே
பாவமகல விந்தப்பாரிலப் துல்லாவென்றன்
வல்திரக்க னவிலாகிலும். (தாஹா)

பதம்.

இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

அன்னமே நானென்ன செய்குவேன்
ஆவல் மீறித்தேடியலைகிறேனடி.

அநுபல்லவி.

நன்னயஞ்சூழ் மதிறுவாழும்
மன்னரையிரு கண்ணாற் காணவென்
றிங்கிலங்குனி லெண்ணியெண்ணியே. (அன்ன)

சரணங்கள்.

(1) தேவரீ ரினுமிந்தவாது
செய்ய நான் றக்குமல்லவே - எடி - தேவரீர்
பாவ மிஞ்சிப்பரதவித்து
ஆவலுடன் றவிவரும்
பாவிமுகம் பார்க்கா விடில். (அன்ன)

(2) வஞ்ச னிபுலீ சென்னைவஞ்சி
மைய லின்னம்பான் மாய்க்க வெய்கிறான் - எடி - வஞ்ச
மாறி மீறி வந்தே னிதேன
வந்தன மிகத் தந்த வெனையு
வந்தருள்தந் தாளா விடில் (அன்ன)

(3) அந்த ரமதி சுந்த ரமதாய்
வந்து பணிந்த விந்தை நபி எடி-அந்தர
கந்த ரங்குடை நிழற்று நாதர்
என்றனையவர் சிந்தையினும்
சொந்த மாய்வந் தாளா விடில் (அன்ன)

(4) மாம லர்கள்சூழ் மக்கா வாசர்
மன்ன ரப்துல்லா மாமக வெடி - மாமலர்
தாம தஞ்செய் யாது கூடி
சந்த தமும் விந்தை யினற்
கந்தப் பாதம் போற்றி செய்ய. (அன்ன)

ஓரடிப்பதம்.

இராகம் - காம்போதி - திரிபுடைதாளம்.

வீசோணம்.

இராஜ ராஜ ரானபோஜர் கஸ்தூரிமெய்த்த
[illegible]சருல் லாசரடி - முப்புவியாளு
மீசரிறைத் தூதடி
தேச தேசர்புகழுந் திருமதீ னவில்வாழும்
ஜெய ஜெய வென விண்ணோர்
தினமும்வந் தனஞ்சூழும்
மாசக லொளிவீசும்
வனைதெளி வாகப்பேசும்
மந்தரங் குடைநிழற்ற மகிழ்ந்து நடைசெய்காசிம்
மிகு - வஞ்சியர்கூடி வடிவுறு
மஞ்சரஞ்சூடி நடன
மிஞ்சியேயாடி பலவித
மின்சொலைப்பாடி
வாழி புகனல் மக்கா வள்ளலப் துல்லாபாலர்
ஆழி புலகில்தாரு வண்ணலகு மதுவெனும் (இராஜ)

பதம்.

இராகம் - வசந்தம் - மோகனதாளம்.

பல்லவி.

மனமோக மிஞ்சுதே யிப்போது - உயர்
மந்தாரம் வந்து பணிந்திடு பவர் மீது.

அநுபல்லவி.

தினந் தினமும் பதத் தெரிசிப்பை நாடி
திகைத்துத் திகைத்துப்பர துவித் துளம் வாடி
கன வந்தனஞ் செய் தேன் பலகோடி
கதி தரு முதுமறை யதிபரைத் தேடி. (மன)

ஏகசரணம்.

(1) வதனஞ் சந்த்ர சூர்ய ப்ரகாசம் - மருவுங்காந்த
மணக்கும் பரிமள மெய் வாசம் - ஹஸிபு வாயின்
மதுர மொழிகளோ ஸந்தோசம் - அனைத்தகற்று
மன்னர்க் கிலங்கிக ரெத் தேசம் - இறையருளால்

மண்டலத் திற்சிறந்த அண்டர் பரவவரு
நடையார்-மகிழ்ந்தறுவில்
மண்டு கபுஷ்டனே சென்று வருஞ்சரணை
யுடையார்-கதிஞ்சுரத்திற்
கொண்ட தமர்கண்மகிழ்ந் தண்டிடும் புனல்கர
முடையார்-உலகமெங்கும்
விண்டிடற்கரிதாக வண்டம் பரவும்புக
ழுடையார்-நிகரில்லாத
மக்கநக ருக்குமுயர் சொர்க்கநக ருக்குமர
சுடையார்-அதனுளொன்னும்
தக்ககுல மிக்கவே தன்முழக்கவரு மக்கமெனை
யுடையார்-ஒளியிருளில்
திக்குமுழு தொக்கவே விளக்கவொரு மிக்குஞ்
சட்டமுடையார்-பரவைசூழ்ந்த
பக்கமுழு தக்கட ருக்கனைப் பழிக்குமொழி
யுடையார்-அநுதினமு

கீர்த்தனரஞ்சிதம்.

மதிப் பிலாத பலமலர் வகைசூழ்
வானரம் பையர்கள் வனப்புறநாடி
துதிக்குமா அப்துல்லா கவிபாடி
சூழும் செய்யி தரு மதுசரண்டேடி. (மன)

பதம்.

இராகம் - சங்கராபரணம் - அடதாளம்.

பல்லவி.

வாச கஸ்தூரி வாய்ந்த ராஜஸ்ரீ - எனும்
வள்ளல் மீது மயலானேன் மினசரி.

அநுபல்லவி.

தேச மெங்கும் புகழ் விபூதி
திசை யெட்டுங் கதிர் திகழுஞ் சோதி
நேசித் தவர் துயர் நீக்கிடு மாதி
நித்ய கொடைக்கூர் நீட்டு நன்னீதி

நேர் செம் பொன்னங் கிரி
நேமி தோயா வரி
சீர்ம திரு புரி
செங்கோ னிதம் புரி (வாச)

ஏகசரணம்.

பாதி யிரவிலரி பூகல மீதில்
பாங்குட் னழைத்த காரணர்
சோதி யஸ்த முற்ற போதலிக்காய்ப் பின்னுங்
தோற்றச் செய்பரி பூரணர்
ஆதிஸ் தானமிக வாதித் தடியவ
ரேத மகற்றிய வாரணர்
கோதறு நற்குல சாதி குறைஷியர்க்
காதின மாய்வருங் காரணர்

கொங்குகாதங்கம முங்கம் பிரகாசர்
கோலயவ்வன மூனிவிகர் வேசர்
சங்கையுறு மக்காசற்குண போஜர்
சாற்றுமுகம்மதப் துல் லாக்கருணேசர்.

தற்பரனின் னாதர்
சதுமறைக் கருநாதர்
அற்புதமா நீதர்
அத்விதந்தரு போதர். (வாச)

பதம்.

இராகம் - தந்யாசம் - ஆதிதாளம்.

பல்லவி.

இந்த நேரமேயு வந்து
வந்தருள் செய்வீர் - பதந்
தந்தருள் செய்வீர்

அநுசரணங்கள்.

(1) கந்தரங்குடை நிறைந்துமுன்னைத
காரண நபியே - என்
அந்தரங்க மறிந்தாசுக
ஆரண மேலா - பரி
பூரண சீலா (இந்த)

(2) பூதலந்தனிலடியே னோயாய்
பொற்சரண் தேடி - நித்யங்
காதன்மிகமீறு தென்னை
யாதரித் தாளும் - என்மே
லன்புவைத் தாளும் (இந்த)

(3) மாவளஞ் செறிமக்காவாழ்
மன்னரப்துல்லா - தினம்
மேவுமக வாயுதித்த
ஆவலர் நீரே - என்றுங்
காவலர் நீரே (இந்த)

பதம்.

இராகம் - மணிரங்கு - சாப்புதாளம்.

பல்லவி.

மோக மாகுது அகமுருகுதே
மோட்ச பதந்தேடி - நிதம்.

அநுபல்லவி.

ஆக மதைத்துயர் விரட்டுதே - இன்று
தாக மெனுமனன் மூட்டுதே - உமை
யஞ்சி யஞ்சித் தொழக்
கெஞ்சிக் கெஞ்சி வரும்
பஞ்சப் பயல்பிழை வஞ்சந்தீர மிக. (மோக)

சரணங்கள்.

(1) கொண்டல்குடைபிடி மண்டலீகருக்கள்
கொங்கு கந்தங்கமழும் - இந்த
மண்டலமீதடி தோயாதவத்தீர்
வதன மிந்தை யிகழும் - படி
எண்டிசையும்புகழ் கொண்டவிநோதரே
ஸக்கஸ்ஸரி ஸங்க
இங்கத்திமி மிக (மோக

(2) கானில்வல்லியிலப்பெ மறியுளாக
களியுறச்செய் தனிரே - ஒரு
கோனின்மொழிக்காய்த்தனைசக்குறப்பிந்தீர்
குபேரன் வகுத் தனிரே - என்றன்
ஈனமறவநுதினமனமது
ஸஸ்ஸா - ஸிஸ்ய - தின்னிதப்ப - தத்தாகிர்தி
தொத்தோ மிக (மோக

(3) அண்டர்கள் கொண்டாடு கின்றமக்காரக
ராளப்துல்லா பாலரே - உயர்
விண்டல மென்றுந்துதிக்கு மாதாமிரு
வியந்து பெறுஞ் சிலரே - துதி
விண்டுஅப்துல்லாவாங் தொண்டுசெயுநாதரே
ஸரி - ஸரி - கபி - தனி தனிபம
தினகீர்த - கதோம் - தாம் - மிக. (மோக

பதம்.

இராகம் - தேசிகதோடி - ஏகதாளம்.

பல்லவி.

இந்தவேளை வந்து சேருவீர் - உயர்
கந்தரங்க டந்துவருஞ்
சுந்தரப் பதமேதர.

அநுசரணங்கள்.

(1) சந்திர னொளிமழுங்க வந்துயர்பி ரபைதரு
ழிந்ததை வருத்தகந்தம் விந்தைவிளைத்தீர்
கந்தரங் குடையிழற்று மெங்களிற குலேறுந்தஞ்
சிந்தையுவந் தேகிதமுஞ் சொக்தப்பய லென்றன்முன்னீர்()

(2) காதமே கஸ்தூரிகமழ் தேகரே படிபடாத
பாதகபு ஷோடிநைவ ஞதியறு ஷிற்சென்றோரே
காதன்மிக வாகுதென்றன் மாதுயரங் களைநின்று
போதர வுடன்புகல வாதரவு தாகவேதீர் (இந்)

(3) வன்கணை ரிபுவிசெலன்னைத் தங்கடஞ்செய் திட வெண்ணிக்
கங்கணம் புனைமகளிர் கொங்கைவலை யினின்மாட்டி
யக்கமதை வாட்டியுயிர்ப் பங்குசெய்கி றுனொளியே
னெங்குமலேங் தேசபய முங்களைய லாவிலேதீர் (இந்)

(4) வானவர் கிறையுமக்கா மாநகரப் துல்லாவுக்கோர்
கோனென வுதித்தமக வானஹபி பானதுய்யத்
தானவன்றன் றிருத்துத ராணமகு மூதரசே
சனமிகுஞ் சிறிய ஞனஅப்துல்லாவை யாள. (இந்)

மாட்சிமைதங்கிய இமாம், முகம்மதிபுனு
இத்ரீஸுஷ்ஷாபியீறகுமத் துல்லாஹி அலைஹி
அவர்கள் மீது

கட்டளைக்கலித்துறை.

ஆரணனை மாபவ மீதே சுழன்று வருதினமும்
முாணனை சிந்தையின் முக்மல்லி வாரிதி மூழ்குமெனைத்
திரனை மெய்யறி வெய்தரும் மீதிசை செப்புதற்குச்
சரணுக் ரேகமேதந்தா ணுவீ ரிமாம் ஷாபியியே.

பதம்.

இராகம் - ஏசல்பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

சர்ணானுக் ரகந் தாருமே - தமியேனுக்கித்
தருணம் அருள்வாருமே.

அநுபல்லவி.

அருணோத்யம் போலிந்த வகிலந் தனிற் பிறந்த
ஆதாரப் பொருளான அண்ணலேயாம் ஷாபியி (சர)

சரணங்கள்.

(1) ஆதிமறை தெளிந் தோரே - யாயுகமேழில்
ஆகம முணர்ந் தோரே - ஆதி
சோதிமய மாய் மிக்கத் துலங்கு மணி விளக்கே
சுருதியி லருள் செய்யுங் கிருபை யுடையிர் மெய்யாய் (சர)

(2) பாவமலே போ லாச்சே - பாவியா னதைப்
பகர்வதால் பெரு மூச்சே - பாவ
ஆவி பதைக்குதையா ஆவின மாகுதையா
அடைந் தபிமானநீக்கிக் கடைக்கண்ணாலெனைநோக்கி (சர)

(3) திக்கோர் புகழுல் லாசரே - இத்ரீனருட்
செல்வராய் வந்த போசரே - திக்கோர்
ஹக்கனருள் மிகுத்த ஹாஷிம் குலத்துதித்த
அதிபரிமாம் ஷாபிஇ கனி அப்துல்லா பெறநும். (சர)

கௌதுல் அகுலம், குத்புல் அக்தாபு, முஹியித்தின் அப்
துல் காதிறுல் ஜீலானிறலியல்லா ஹுத்தஆலா அன்ஹு
அவர்கள்மீது

கட்டளைக்கலித்துறை.

மதியார் தருமொழி மார்புய மீதுறும் வாரிசநேர்
துதியார் தரும்பதத் தீருயர் நாயகீர் தூய்மை யுள்ளீர்
கதியார் தருமுஹ்யி யித்தீனங் காட்சிக் கனவெனிலும்
அதிசௌக்ய பாக்கிய மானுலெனக்குமதாநந்தமே.

பதம்.

இராகம் - தோடி - அடதாளம்.

பல்லவி.

அதிசௌக்யவர்க்ய மானு லெனக்கும
நானேந்தக் காட்சி யையா.

அநுபல்லவி.

மதிதவழ் சோலைசூழ் மாபகு தாதில் வாழு
மன்ன பூஸாவி ஹறருள் பாலரே (அதி)

சரணங்கள்.

(1) கங்குல கலும் பிரசங்கரே - மறையோர்
கருது முஹியித் தினென் றங்கரே
மங்கை யுழன்று தளர்ந்து வதங்கியே
வந்துரைக்கும் பிரியாதை விளங்கியே
வங்க மமிழ்ந்துவி
றந்ததோர் மைந்தன்
டர்ந்து படர்ந்த
வாரி விட்டு வாக்கலத் தோடழைத்
திரே யென்றும் புகழ்ந்து மகிழ்ந்திட
நீள வெற்றி யளித்திடு மாதவ (அதி)

(2) ஆதி யறுஷிற்றுயில் கொண்டோரே - நபியின்
சீதபதந் தோளிற் சுமந் தோரே
பூதல மீதுற மூத றிவி ரொலீ
மார்புய மீதிலென் பாத மென்றேறிட
புந்திநி றைந்து வதிந்து
விரைந்துப ணிந்து த ணிந்தப்
போதிலுற் றவ ரொக்கவு மெய்க்கு மெப்
போதும் வெற்றி யியல் புடையீரிப்
போதுசித்தியடைந்திடவேசெயும் (அதி)

(3) சந்தஞ்செறிதருமயி லாடுமே - புவனச்
சாலைக்குயில்கனிசை பாடுமே
மந்தியுகந்தஞ்செய்விந்தை விளங்கிடு
வண்டினங்கள்சுர லோசை முழங்கிடு

சந்தனஞ்சிந்து ஜெயி
லானிற் பிறந்து
வந்து வளர்ந்து
தர்லவட்டம் பரந்துநிற்கும்பல
சிலமுயீறு முறம்பகு தாதறு
கூலமுற்றவரே யப்துல்லாக்கருள். (அதி)

பதம்.

இராகம் - நாட்டை - ஆதிதாளம்.

பல்லவி.

மானே மையலாகு தென்செய்
வேனிப் போதடி - அடி
தேனேதிகழ் மொழியாளே யென்னுவலைத்
தீர்ப்பவர் மீதடி.

அநுபல்லவி.

வானவர்சூழ் ஜெயிலானரசாளபு
ஸாலிகு பாலரடி
வையம் புகழ்ந்திடுங் தையலர்பாத்திமா
வாமருள் சீலரடி
தீனவர்க்கா தீனமானநன்முஹியித்
தீனெனும் போரடி - அவர்
சேவடிதந்திடத் தேவரீரிடம்
சீக்கிரம் போய்ச் சொல்லடி
சீக்கிரம் போய்ச் சொல்லடி (மானே)

சரணங்கள்.

(1) ஆசையாலலைந்தலைந்து அருளைக் காணேனே-எனக்
கல்லும்பகலவரல்லாவினைப்பேது மில்லாமலானேனே
பாசத்துடன்முகம்பார்த்திரங்காததால்
பாதவித்துளம் வாடி
பாவியினியென்றனுவலதையெங்கு
பகருவேண்டி. யோடி
மாசனுகாதநங் தேசிகரவரிரு
மாட்சிமை சரணடி - அடி

மாங்குயிலே மிக
வேங்கியே நித
மாதவரைத் தேடி
மாதவரைத் தேடி (மானே)

(2) தேனதித் தடாகஞ்சூழுந் தேசராமடி - அதில்
தினோர்தினம்புறக்கா னேதுமோசையின்
திவ்யமென் சொல்கேளடி.

கானக மெங்குங்கமழ்பூஞ் சோலைக்
கனித்திடற்கரி தாமடி
காதலுடன்றெரு வீதியரம்பையென்
கண்ணுக்கிலடங் காதடி.

சேனையடர்திரு மாநகராம்பகு
காதப்துல் காதிறடி - நிதந்

தேடுமேப்துல்லாவை
நாடியேயுரை
செய்வது நீதல்லடி
செய்வது நீதல்லடி. (மானே)

பதம்.

இராகம் - பைரவி - சாப்புதாளம்.

பல்லவி.

பாரா திருப்பது மேதோ - இப்பயலென்னைப்
பாரும்பாரு மையா.

அநுபல்லவி.

ஆரியர்புகழுமற் சீரின்பகுதாதுக்கோர்
அண்ணலென்வுதித்த புண்யமுஹியித்தீனே. (பா)

சரணங்கள்.

(1) அடரும்பலவினை யாலுடல்வாடி
அனவரதமுஞ்சொந்த அருளதைத்தேடி
திடமோடுளஞ்செழும் அடிசுமைநாடி
திவ்யசந்நிதானஞ் சேர்ந்தேன் விரைந்தோடி

செஞ்சரண்சரண் தஞ்சமென்றடியேன்
சிரமேற்கொண்டேன்.

அஞ்சுகம் பெற
வின்சொலிகவு
மஞ்சலாயுமைக்
கெஞ்சுறேன் முகம் (பா)

(2) அலைகட லுளமிழ்நவ் வழைத்தோரே
ஆயர்க்குமாதின்சேய் சுபமதை செய்வித்தோரே
மலைக்குமா யனுக்கதி நலமளித்தோரே
மங்கைகொங்கைமாற்றிப்பின் வாகாயமைத்தோரே

மந்தர நிகர் சுந்தரக் கொடையார்
மகிழ்ந்தே யும்மை

சந்ததந் துதி
வந்தனஞ் செயுஞ்
சேர்ந்த னென்றேயு
வந்தருள் முகம் (பா)

(3) சதுமறை யோர்சூழுஞ் ஜைலானில் வாழுஞ்
சாதுகுணத்தா பூஸாலிகு நீளும்
அதிக தவத்தாலிப் பதியிலெந் நாளும்
அதிபதி யெனவந்தீர் அடியனை யாளும்

அண்ட ரண்டி யேதொண்டு செயு மிறையே
அனைவோர் புகழென்ற

மண்டிடு மண்டலிகரே
வண்டனப்துல்லாக்
கின்றருண் முகம். (பா)

பதம்.

இராகம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

செஞ் சரணந் தந்தெந் நாளுமே - சிறியேனெனின்
சஞ்சல மகற்றி யாளுமே.

அநுபல்லவி.

இன்சொ லிசையென்று நீளும்
விஞ்சை பகுதாதில் வாழும்

ஏந்தலே யிறை யொலிமார்
வேந்தரே நினுக்குதவி
யீந்த நல் முஹியித்தீனே

காதலித் தேன்மனத் தீதகற்றித்தம
தாதரமேதரு மூதுரை வேதரே
அதிமா தருநிறைந் தலர்தருமங்களைப்
பதியாந் திருஜை லானப்துல்காதிறுவே

சாரி - சரிசரி - தாதப்ப - தாப்பம
தாம - கரி - கரி - சாசனி - தாப்பம
ஸஸ்ஸா - னின்னி - தபத
நின்னீ - னிதா - தபத

சரி - கம - பத - சநீ.
சனி - தனி - பத - பம. (செஞ்சர)

சரணங்கள்.

(1) காரணம் விளங்குநாதரே - கருத்திலுற்ற
பூரணமதான - போதரே

சீரணி சிறந்தபதி
சித்தர்களின் மகாநிதி
சீர்த்திசேரிலக்கு மதி

சீக்கிரமெனதுதுயர் நீக்கியாள்முஹியித்தீனே
காதலித்தேன் - சாரி - சரி (செஞ்சர)

(2) கந்தரநிகர்த்த கொடையார் - கதிபெறுநற்
சுந்தர மிகுத்த நடையார்

பந்திபந்தி யாயநந்தர்
பாக்கியம்பெற்றூர்தொடர்ந்தார்
எந்தப்போதிலு நிறைந்தார்

எங்கனமதாயினுமி ரங்கியாள்முஹியித்தீனே
காதலித்தேன் - சாரி - சரி (செஞ்சர)

(3) அற்புதநிறைந்த நாயகம் - அபூஸாலிகு
நற்புகழாரீன்ற நாயகம்
தற்பரனருண் மிகுந்த
தலமதாம் பகுதாதூரமு்
மெய்ப்புகழிறை சற்குரு
மெய்யரேயிப் பையற் கருள்செய்யநன்முஹியித்தீனே
காதலித்தேன் - சாரி - சரி. (செஞ்சர).

பதம்.

இராகம் ‡ தேசிகம் ஆதிதாளம்.

பல்லவி.

சகியே மையலானேன் - சரசமுள்ள
சகியே மையலானேன்.

அநுபல்லவி.

அகிலம்புகழு மென்றன்
ஆண்டகையைத் தேடி. (சகியே)

சரணங்கள்.

(1) கருமுகில் குடை பிடுங் காரணகபியோர்
தருமதுரை பதத்தைத் தேடி - சகியே
தருமதுரை பதத்தைத் தேடி - மையலானேன் (ச)

(2) விண்ணோர் மண்ணோர் துதிக்கும்
வேந்த ரெனும் ஹஸனேன்
அண்ணல் குலத் தொலியை நாடி - சகியே
அண்ணல் குலத் தொலியை நாடி - மையலானேன் (ச)

(3) வையகம் புகழ்ந் திடும்
வள்ள லெனவே வரும்
செய்யி தபூஸாலிகு சேயர்மேல் - சகியே
செய்யிதபூ ஸாலிகு சேயர்மேல் - மையலானேன் (ச)

(4) புவியிற் றீனோர்கள் யாரும்
போற்றும் பகுதாதில் வாழ்
திவ்ய அப்துல் காதிறைத் தேடி - சகியே
திவ்ய அப்துல் காதிறைத் தேடி - மையலானேன் (ச)

(தரு.)

இராகம் - ஏசற்பண் - ஏகதாளம்.

கண்ணிகள்.

(1) கருணை புரிந்தருளென்றன் - காதல்தீர வெந்நாளும்
கௌதுஸம் தானியப்துல் காதிறு முஹியித்தீனே. (கரு)

(2) மருமலர்ச் சோலை செறி - மாபகு தாதினூரா
குருவே யெனைக் கண் பாருங் கோதகல் த்ஸ்தகீரே (கரு)

(3) வஞ்சி மாயையா னெஞ்சம் - வாடி மெலிந்திடாது
அஞ்ச லென்றென்னை யாளும் - அருள் கௌதுல்குல மேரே

(4) மாநின் சஞ்சலங் கண்டு - வங்க வருத்தினேரே
ஆதித்தன் வந்து பணிந் - ததபு செய்யற் புதரே (கரு)

(5) கன்னல் கதலி சூழும் - கனதி ஜெயிலானில் வாழும்
அண்ணலபூஸாலிகி - னருண்மைமகவேநாளும் (கரு)

திருபகுதாது தேவாரம்.

தரு - பண் - நீலகாம்போதி - சாரதிதாளம்.

ஏகசரணங்கள்.

(1) கோவேசற்குருவே - களி - கூரின்பத்தேன் கருவே
தாவே பொற்றிருவே - பகு - தாதமரா ணிமுத்தே
பாவே நற்குணரே - குது - பாகியதத்துவரே
நாவேநம்பதமே - யெந்த - நாளும் புகழ்வேனே. (கோ)

(2) கோனே போதனரே - அண்ட - கோளர சாளரசே
தானே ரக்ஷகரே - பகு - தாதமராணிமுத்தே
வானே வான்மணியே - உளம் - வாழுஞ்சிந்தாமணியே
நானேநும்பதமே - யெந்த - நாளும்புகழ்வேனே. (கோ)

(3) வித்தே வித்தகரே - ஞான - வேதமருத்துவரே
சத்தே சற்சனரே - பகு - தாதமராணிமுத்தே
புத்தேளிர்த் தருவே - பரி - பூரண மெய்க்குருவே
நத்துமடியேனும் - பத - நாளும் புகழ்வேனே. (கோ)

(4) வேதாந்த வாக்கியமே - தரும் - மேலான்பாக்கியமே
சாதா ஸம்பன்னரே - பகு - தாதமராணிமுத்தே
ஆதாரப்பொருளே - யெனக் - காநந்த மேயருளே
நாதா நிம்பதமே - யெந்த - நாளும்புகழ்வேனே. (கோ)

(5) தாராதிபதியே - யருள் - தாருங்குணநிதியே
சாரேனும்மையலால் - பகு - தாதமராணிமுத்தே.
சீரே சீரணியே - சிந்தை - தேருமனோமணியே
காரே கற்பகமே - யெந்தக் - காலும்புகழ்வேனே. (கோ)

(6) காரண கண்மணியே - இரு - கண்மணியுண்மணியே
ஆரணமேகனியே - பகு - தாதமராணிமுத்தே
காரணியோர் புகழ்ந்தேத் - தநு - ஸாலிகுதம்மகவே
பூரணநுங்கழலே - யெந்தப் - போதும் புகழ்வேனே. (கோ)

(7) பீரே யெம்பதியே - மனப் - பேதமில்லாமதியே
தாரே தயாநிதியே - பகு - தாதம ராணிமுத்தே
ஆரே யின்னமுதே - ஆப்தல் - லாவெனின்றிதறப்பீர்
நீரே நிட்களரே - உம்மை - நித்தம் புகழ்வேனே. (கோ)

குத்புநாயகம், செய்யிது அப்துல்காதிறு
நொஹுல்கமீது ஆண்டவரவர்கள் மீது.

கட்டளைக்கலித்துறை.

சிந்தாமணியன்ன மேனகை வாழ்க்கையிர் தேசுலவு
நந்தாதுலருய்ய நாடோறுமற்புத காட்டுகின்றீர்
சிந்தாகுல முற்ற சேயனென்மீது சிறிதிரங்கித்
தந்தாளுஞ் ஷாகுல் கமீதொலிதாமரைத்தாண் மலரே.

பதம்.

இராகம் - கல்யாணி - திரிபுடைதாளம்.

பல்லவி.

தாமரைத் தாண்மலரை - தருணநீர்
தந்தி ரட்சியுமையா.

அநுபல்லவி.

தேமா ஸ்ரீதனோதிந் - திப்பின் மாரி பொழி
சிசிரக் கிருக நாகைசீர் ஷாகமீதொலியே.
பப்ப - பதப்பம - பபம - காரிஸ
ரிக்கஸ - நிதப்ப - ரிம்மகாரிஸசெரி. (தாமரை

சரணங்கள்.

(1) கொண்டனிகர் கொடைக் கரமகா மேரே
கோதகற்றியே தஞ்சைக் கதிபனோய்தீர்த்தோரே
தெண்டஞ்செய் யிவ்வடி யேனென்மேல் சற்றிரங்கித்
தேசோம யாகந்தத் தெரிசனந் தந்திட்சணம்
பப்ப - பதப்பம - பபம - காரிஸ
ரிக்கஸநி - தப்ப - ரிம்ம - காரிஸசெந் (தாமரை)

(2) பாவி யான்செயு பாதகங் களுக் களவில்லை
பாதாரவிந்த மன்றி யாதாரமும் வேறில்லை
பாவ மகற்றியே நற் பாக்கியம் பெற விப்பூவில்
சேவித் துமையே துதித்தேன் ஷாகமீ தொலியே
பப்ப - பதப்பம - பபம - காரிஸ
ரிக்கஸநி - தப்ப - ரிம்ம - காரிஸசெந் (தாமரை)

(3) தேச மெல்லாம் புகழ் வீசும் ப்ரகாசரே
செய்யிது ஹஸன் குத்தூஸ் செய்தவப் பேரசரே
வாச மலர்த் தேந்தடாக மடர்ந் துயர்ந்த
சாசுவத நாகைவாழ் ஷாகுல் கமீதொலியே
பப்ப - பதப்பம - பபம - காரிஸ
ரிக்கஸநி - தப்ப - ரிம்ம - காரிஸசெந் (தாமரை)

காயற் பட்டணத்தில் அடங்கி விளங்கும்
மாட்சிமை தங்கிய நாயகம்,
ஷம்ஸுத்தின் ஒலியுல்லா அவர்கள்மீது

கட்டளைக்கலித்துறை.

வளமே தடம் பொய்கை சூழ் காஹிறம்பதி வந்துதித்தீர்
இளமேவு மைந்தொலி மார்களிற் சென்னியையேய நின்றீர்
மனமான வானரங் கூத்தாட நொந்து வருந்து மெனைத்
தினமா தரித்து வந்தாளுயகீர் ஷம்ஸுத் தீனொலியே.

பதம்.

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

ஆதரித்து வந்தாளு நாயகரே - யெங்கள்
அண்ணல் ஷம்ஸுத்தி னொலியே.

அநுபல்லவி.

சீதத் தடஞ் சூழ் காஹிர் ஜெம்மல் சுலைமானருள்
நாதராகிய ஷம்ஸுத்தீனொலியே நீரெனை. (ஆதரி)

சரணங்கள்.

(1) பாத கமலங் தேடிப் - பதைக்குதே னெஞ்சம்வாடி
வாடி - வாடி - வாடி.
வாது செய்யாம லிந்தப் போதுவந் தடியேனை (ஆதரி)

(2) பாவி படுங்கிலேசம் - பார்த்திரங் கியே நேசம்
நேசம் - நேசம் - நேசம்
பூவில் வந்திடுவீ ரென் றுவல் கொளு மென்றனை (ஆத)

(3) உற்று றுறவர் தம்மா - லுதவியொன் றில்லைமன்னு
மன்னு - மன்னு-மன்னு
பெற்றதாய் தந்தையிலு முற்ற வொலியே யெனை (ஆதரி)

(4) கன்னல் செறியுநாளுங் - கமழும் வகுளை வாழும்
வாழும் - வாழும்-வாழும்
மன்னர் ஷம்ஸுத்தீனே பிச்சின்ன னப்துல்லாவெனை (ஆ)

பதம்.

இராகம் - அரசகல்யாணி - அடதாளம்.

பல்லவி.

ஜெய கோத்ரர்க் கரசர் - என்றுந்
தேனே மயலானேன் - சகிமானே.

அநுபல்லவி.

நயவருள் ஷம்ஸுத்தீ னென்றெவரு மதிக்கும். (கோத்ர)

சரணங்கள்.

(1) புவனத்தி லெனையடர் புதுவினையை விரித்துப்
புகல் வதற் கிலையுவ மானம் - அந்தப்
புன்மை குறைய செம்பொற் பதமே சரணென்றிதோ
புந்தி யுவந்தே ஸமஸ்தானம் - மிக
அவதிபா லான மதிக்கினம்
ஆவ மானம்
கலைக் யானம்
பிர தாணம் (கோத்ர)

(2) அரிய காருண்ய மழை சொரியுங் கொடைக் காங்கொண்
டாதரித் தாள வெண்ணுதோ - இன்னும்
அநுதினமு மதடி கனவிலேனு மறவா
அடியேனின் மீதென்ன வாதோ - என்மேல்
கிருபை செய்வதுவுந் தகாதோ
இதுரு தோ
குறை யாதோ (கோத்ர)

(3) மறையவர் பரவிய நெறிமுறை யுறுங் காஹிர்
மன்னர் சுலேமான்றங்குமாரா - இந்தத்
தாரணியி லெந்தொலியுள் சிரசாகவந்துதித்த
ஷம்ஸுத்தீனெனுமக மோரா - சின்னஞ்
சிறியேனப்துல்லாவென்றன் பேரா
ஜெய சீரா
உப காரா
அதி காரா. (கோத்ர).

இஃது

மஞ்சக்கொல்லையி லடங்கி யிருக்கும், மகத்துவமுள்ளநாயகம்,

காஹிர், அருமது ஒலியுல்லா அவர்கள்மீது

கட்டளைக்கலித்துறை.

தரங்கத் தலைபுனல் சேரம்ப ரத்தணித் தாரணிக்கோர்
அரங்கொத்த தண்பனை காரஹிருர் வந்திடு மஹ்மதொலீ
உரங்கொத்து முப்பொரு ளாசையுட் சிக்கி யுழலுமெனக்
கிரங்கிடி லென்ஜென்ம மீடேற்ற மாகிடு மேந்தலரே.

பதம்.

இராகம் - தேசிகம் - ஆதிதாளம்.

பல்லவி.

இரக்கிடி லென்ஜென்ம மீடேற்றமாமே
இரங்கா விடிலுட லாவியும் போமே.

அநுபல்லவி.

அருமறை யோர்போற்று மைந்தொலீ யிலுற்ற
அன்னை லகுமதெனு மன்னு மொலியே சித்தம். (இர)

சரணங்கள்.

(1) பிள்ளை செயும்பிழை பெற்றோ ரகந்தம்
பேணிப் பொறுப்பது பெரியோர்க்குஞ் சொந்தம்
தன்னை தெனக்குமது பாதார விந்தம்
தந்தாளு வீர்தய வாகீ ரக்தம் (இர)

(2) ஐயாவுமைக் கெஞ்சிக் கேட்க வீணாமா
அபயமென்றா லென்ன வருள் குறை வராமா
மெய்யாயிச் சேயனான் வெதும்பிட லாமா
மேலாம் கலைமா றொளிதரும் பூமா. (இர)

(3) கைவிற்றங் கக்கங்க ணங்களைப் பூட்டி
கண்களைக் காட்டும்பெண் பாசத்துண் மாட்டி
நையு மெனைக்குநீர் நல்லறி வூட்டி
நாவா லொரு மொழி நவின்மன நாட்டி (இர)

(4) வானரம்பையர் கூடிக் கொஞ்சிக் குலாவி
வாழ்த்து மஞ்சக் கொல்லை நகர்தனை மேவி
தானரசா ளொலி அருமதே கூவி
தாவிவரும் அப்துல் லாவெனும் பாவிக். (இர)

இஃது

காயற் பட்டணத்திற் பிறந்து, தேக்கரையிலடங்கி விளங்கும்

ஹஸரத்து, மாதிஹுர்றசூல்

ஷெய்கு ஸதகத்துல்லா சாகிபு ஒலியுல்லா ஆண்டவர்

அவர்கள்மீது,

தாழிசை விருத்தம்.

பண்ணார் சுவனத் தரும்பலநாற் பரிவாயமைத்த பெருமதியார்
விண்ணார் பரவுஞ் சபையுடையார் விலங்கல் கரையுமொழியுடையா
கண்ணார் பவனி வருங்கீழக் கரையார்க்கிலங்குந் துறைஞானி
கண்ணால் காணத் தேடுதேடி கருணைமிகச்செய் ஸதக்கொலியே.

பதம்.

இராகம் - கமாஸ் - அடதாளம்.

பல்லவி.

கண்ணால் காணத் தேடுதேடி
கருணை மிகச் செயும் ஸதக் கொலியைத் - தினம்

அநுபல்லவி.

கண்ணே யொருமுறை யாயினும்
கனவிலுமெம் வாராடி. (கண்ணால்)

சரணங்கள்.

(1) மங்கை முகங் காணாப் பயிர்போல் வாடி
மீதாவைக் காணாச்சி சுப்போல் தேடி
அழுதும் தயை காணமல்
அவரா னென்னுயி போகுது
சகியே னடி. (கண்ணால்)

(2) அருணனொளிபோற் பூவிற்கதிர் வீச
அறிவுக் கடவுள் விசுவாசம்
தாணியிதி லெனை யீன்ற
தாதா விறைமொழி காதாடி (கண்ணால்)

(3) அவனியில் வான்மழை பெய்யச் செய்தார்
அறிவுரைத்தே கல்வி யுழச்செய்தார்
தவமிரு மாமக்கக் கஉபாவில்
சகியே ஒருதரந்தும்
தொழுது கொண்டோடி (கண்ணால்)

(4) காஹிர்மா நகர் வருங் கோவாம்
கருமை யிழற்று நபிமறைப் பூவாம்
வாகுறுங் கீழக் கரை வதிந்தோர்
வாழ்த்தும் புகழப்துல்
லா வெளியேன் றினம் (கண்ணால்)

பதம்.

இராகம் - ஆநிமோகனம் - சாப்புதாளம்.

பல்லவி.

மாதேயதி விரகமாகுதடி - யென்மு
தானை ஸதக்கொலி மீதிற்றின மென்றன்

அநுபல்லவி.

ஆதியருள் வேதமுத் ருயர்த்திடும்
அந்நாவல் ஸதக்கொலி வண்ணச் சாண்மீதில் (மாதே)

சரணங்கள்.

(1) ஏனோ வென்றன் மீதிம் பரா முகமோ - விதம்
கென் செய்குவே னிடஞ் சொல்வே னடி - ஏனோ
வானோர்க் குரைத்தே மழை பெய்யச் செய்
வள்ளல் ஸதீக்கென வின்னுமொலி மீதில் (மாதே)

(2) மக்கத் தறிவோர்க் கருள் செய்தன ராம் - எழில்
வஞ்சியர் ஹஸறல்சன் கொஞ்சிக் குலாவிடு - மக்கத்
தக்கோனின் கஉபாவுக் கைந்துந்தொழச்
சார்ந்த ஸதக்கொலி போந்த சரண் மீதில் (மாதே)

(3) மாஹிர் சுல்மானருள் பாலாடி - கனி
வாழை சொரிந்திடுந் தாழை நிறை காயல் - மாஹிர்
வாகாய் கவிபல வழுத்தப்துல்லா வெனை
வருத்தும் பவத்தை யறுத்த ஸதக்கொலிமேல் (மாதே)

காயற்பட்டணத்தி லடங்கி விளங்கும்,
மகத்து வமுமீளா நாயகம், ஹலறத்து

இமாம் ஷாம் ஷிஹாபுத்தீன் ஒலியுல்லா ஆண்டவர்

அவர்கள்மீது

யமகக்கட்டளைக்கலித்துறை.

திருப்பா தமெஞ்சருஞ் சீரான நேர்வழி சேர்ந்து மனத்
திருப்பா கப்பூண்டிருப்பான் பலநூல்க ளியற்றியமீர்
திருப்பா ததாசனிதமே மகிழ சிரம்புனைய
திருப்பா ததாள்தரா தேதோ திகழ்ஷாம்ஷி ஹாபொலியே.

பதம்.

இராகம் - சாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

பாதத்தாள் தராததேதோ - இந்தப்
பையல் மீதென்ன வாதோ தீதோ.

அநுசீரணங்கள்.

(1) மாதவ ஞானப்ர சநதா - என்று
மாநிலம்போற்றுமெய் வேதா - எனக்
காத்ர வாகுமெங் தாதா - சொந்த
அடியேன் முன்வர வொண்ணாதா (பாத)

(2) பிரவிர்த்தி னுள்ளம் வருடி - யானைற்
பாக்கியம் பெறமிகக் காடி - இனும்
ஆவலதோடுற விரிடி - சரண்
அடைந்தே னிதோ விரைந்தோடி. (பாத)

(3) என்னைநீர் கைவிட லாமா - பல
இடரதெனைத் தொட லாமா - விணில்
சின்னன் யாதும் கெடலாமா - கிர்பை
செய்வதலே கடலாமா (பாத)

(4) கன்னல் செறியுங்காஹிருரா - மிகு
கர்த்தர் சுலைமான் குமாரா - ஆர்க்கும்
அண்ணல்ஸா மொலியெனும்பேரா - இந்த
அப்துல்லாக்கருண்மகா மேரா. (பாத)

பதம்.

இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

கமலப் பதந் தந்தெனைரட்சிப்பீர்
கருணை செயும்ஸாம் ஷிஹாபுத்தின்.

அநுபல்லவி.

(1) இமையவர் துதித் தேத்து நற்பூ பதி
உமையல்லாற் பூதல மீதில்லை கதி. (கமல)

(2) ஏழை யென்றன்மீது இரங்காத தேது
வாழு மென்றனுவி வாதுசகி யாது (கமல)

(3) சிந்தை மிகவாடி சிற்றறுமைத் தேடி
சந்தத்முப்பாடி வந்தேனிதோ வோத (கமல)

(4) காஹிர்சுக்ர்கோவே கீர்த்தமேறுங் தேவே
வாகுறுமப்துல்லா மவ்லும் ஸாமென்னுவே. (கமல)

பதம்.

இராகம் - காம்போதி - அடதாளம்.

பல்லவி.

பகரா திருப்பது மேதோ - செழிந்தப்
பைய லெனைத் தெரியாதோ - முகம்.

அநுபல்லவி.

சீராரு மெங்குஞ்சிறப் போங்கு மாநகர்
செல்வமுறுங் காஹிர்க்கரசே
சீரணியு மாரணரே.
காரணவி ஹாபொலியே (பாரா

சரணங்கள்.

(1) நான்மறையோர் புகழ்வோரே - உயர்
தின்பயிரை விளைத் தோரே
வான்மதிபோலறிவெங்கும் பரவச்செய்
மன்னுவிஹாபுத் தீனநாயகா
வள்ளலேயான் விள்ளுமொழிக்
கெள்ளளவு முள்ளிரங்கிப் (பாரா

(2) வஞ்சியர் மாய்கையி லாழ்ந்தேன் - இனி
தஞ்சமென்றும்மடி தாழ்ந்தேன்
அஞ்சலென்றே யிதஞ்சஞ்சலந் தீர்த்தென்னை
ஆதரித்தாள வொண்ணாதோ
ஐயாவது பொய்யா மன
நையாதருள் செய்யமுகம் (பாரா

(3) மக்கக் களவித் தோரா - இய
மன்னர் சுலைமான் குமாரா
இக்கோர் போற்றும் ஸர்ம்விஹாபுத்தீனையுங்கள்
சேயரிலுள்ளோனுனல்லவோ
சிக்கிரங்கனேநாக்கி யப்துல்
லீரவுக்குநல் வாக்கருள். (பாரா)

இஃது
திருநெல்வேலி ஜில்லா - சீரகம் ஏறுபாடியில், அடங்கி விளங்கும்
மகிமை வாய்ந்துள்ள நாயகம் மெய்ஞ்ஞானசொருபர்
ஹலறத்து-ஸலாஹு-த்தின் ஒலியுல்லா ஆண்டவர்
அவர்கள்மீது

கட்டளைக்கலித்துறை.

இங்கட் குடைநபி காதரின்மாதவ நீநெறியை
யெங்கட் குணர்த்த விறையருளேயைம் தெழிலொளியார்
துங்கத்தவர்களினோர்கடைத் தோன்றலீர் தோதகன்நீர்
செங்கமலப்பத மீவீர்ஸலா ஹு-த்தின் தேசிகரே.

பதம்.

இராகம் - காட்டை - ஆதிதாளம்.

பல்லவி.

செங்கமலப்பதமருள்ஸ லாஹு-த்தின் மன்னெனியே
சிந்தை மிகநொந்தழலுஞ்சோந்தன் கலிதீரும்.

அநுபல்லவி.

தெங்குவய லெங்குநதி
தங்குமேறு பாடி தனில்
தேடிவரவோ வமைந்தீர்
ஜெகமீதினில் - புகழோங்கிய
தருமாகிய மகராஜரே. (செங்க)

சரணங்கள்.

(1) தாயிழந்த பிள்ளைமானைத் தவிக்கிறே னுன்மெய்யாய்
தயவுசெய்வா ராருமில்லைத் தமியமென் றனக்கையா
வாயிழந்த கலம்போல
வாயினேனீர் தஞ்சமென
வந்தேனிதோ சந்நிதானம்
மனமொன் றிட
வினைமிஞ் றிட
புனைசஞ் சல
ஙனிபொன் றிட (செங்க)

(2) வேசியர்களாசையினால் வேதனைக்குள்ளாவேனே
மேலும்பரதேசியெனக் காலமதுகடத்துவேனே
தாசன் மிகவாடிசுயத்
தேசம் விடுத்தேகியுங்கள்
தலத்தினின்று கெஞ்சுகிறேன்
சரண் முத் திட
தரிசித் திட
வாமும் றிட
தருணத்தி னில் (செங்க)

(3) வாசமலர் வீசும்பது பாதரசாள் குருவே
மாமறையார் காஹிர்கலை மாணொலியின்கருவே
தேசமெல்லாம் புகழ்பாவுஞ்
சீர்ஸலாஹுத்தீனொலியே
தேடிக்கவிபாடு மிந்தச்
சிறியேனைப் தூல்
லாவின் றுயர்
அறவே யும
தருள் தங் கிய. (செங்க)

இஃது

மலையாளம், கண்ணனூரில், அடங்கி விளங்கும்,

ஞானைந்து மௌலானா

செய்யிதுமுகம்மதுபுகாரித்தங்களவர்கள்மீது

கட்டளைக்கலித்துறை.

ஓதகாப்பன்னயஞ் சேரக்கமன்னிவவ் வூரமைந்தீர்
மாதவத் தோரித மீது மருவிய மாட்சிமையீர்
பூதலத் தோர்புகழ் செய்யித் முகம்மத் புகாரியே நம்
பாதத்துணை நம்பி னேனென்றன் பாவம் பறந்திடவே.

பதம்.

இராகம் - ரிமடக்குகல்யாணி - மோகனதாளம்.

பல்லவி.

பாதத்துணையேநம்பினேனையா - செம்பொற்
பாதத்துணையே நம்பினேனையா - கமல.

அநுபல்லவி.

பூதல மெங்குங்கதிர் - புகலரிதாகமுதிர்
பூரணமதியம் - போலிவண்வதியும்
காரண்ணராம்பு - ஊரியேசெம்பொற். (பாத)

சரணங்கள்.

(1) கன்னியர் மாயையென்னை
தன்னளவினிற் பின்னி
கட்டிடவல்லத் - தட்டியும்மடியை
வெட்டியேபுகல - முட்டியே வனசப் (பாத)

(2) குற்றந்தவிர்த்தருளக்
கோடிதெண்டனிட்டுக்
கொண்டே வேண்டி - நின்றேனையா.
என்றுமுன்னத - மண்டுங்கமலப் (பாத)

வேற்றனவுசரணம்.

வானரம்பையரப்துல் லாவின்பதம்பாட
மாதர்கூடி யாரஞ்சூடி - நாதம்போட
மாட மயி லாட
குயில் சாட வின
மோட தின நாட
வானரமும் பாய்ந்தேகுதித்தாட
வண்ணக்கிளிகள் மண்டிசைமுழங்க
வண்டென்றென் கிண்கிண் கிண்கெண்
மகிழ புகழை வருள வெருளும்
வனமிகு தாழை மலர்மண நாளும்
மாருத கண்ண னூரினில் வாழும்
மன்னுதி செய்யி தகுமதர் நெடிய
வரத்தா ஹிதித்த பாலசெ துஞ்சி,
மானே - கோனே - மதியே - நீதியே. (பாத)

இ ஃ அ

தூயம் பட்டணத்திலடங்கி இருக்கும், காரணக்கடலாகிய

ஹாஜ-ல்ஹறமைனி

ஃமறுஒலியுல்லா நாயகமவர்கள்மீது.

கட்டளைக்கலித்துறை.

பாதேபதியேபரிவேயுமஒலிபாத்திபரே
திதேபுனைமனச்சேயேனெனது சிரமருவும்
போதேயுவாரீசப்பாதாரமீங்கென்புரைதவிர
ஏதேதுஇன்னமும் மென்முகம்பாராதி ருப்பதுவே.

பதம்.

இராகம் - நாட்டை - ஆதிதாளம்.

பல்லவி.

இன்னமுமென்முகம் பாராதிருப்பது
மேதுவும ஒலியே.

அநுபல்லவி.

கன்னல்செறிகாஹி றென்னும்பதிவாழுங்
கண்ணியரே - தன்னவன்பாற்
சுண்ணமழை - யண்ணலரே. (இன்ன)

சரணங்கள்.

(1) வாவியிலோடும்வங்க மிழந்துங்கள்சேய்
வாடுமப் போதினிலே
சீரியசெங்கரத் தாலெடுத்தேற்றிய
திக்கரசர் மெய்க்குருவே
ஹக்கனருள் மிக்கவரே (இன்ன)

(2) ஓரிரவில் பன்னீருரேகி யேவிருக்
துண்டதி ஜயரெனுங்
காரணர்செய்யப்துல் காதிறொலிதந்தையரே
பாரிலுதித் தோரின்மிகப்
பாவிதனைக்காத்தருளா (இன்ன)

(3) கந்தங்கமழ்வகு தைப்பதிவாழப்துல்
காதிறொலிபாலரே
அந்தமுறுமுரீங்கவு - கந்தப்பதமதை
சந்ததமீ - னைந்தருகுஞ்
சொந்தவப்துல் லாக்கருளா. (இன்ன)

பதம்.

இராகம் - தோடி - சாப்புதாளம்.

பல்லவி.

உமக்கென்மேல் வாதா.
உமறொலி நாதா.

அநுபல்லவி.

ஓர்முறைவர வொண்ணுதா
மாமறைபோற்றுமென் றுதாநன்னிதா (உமக்)

சரணங்கள்.

(1) மின்னார்விழிவலை தன்னான்மயக்கிடா
தெந்நாளுமுமை நம்பினேன்
மன்னாநீ ரின்னமென்
கண்ணின்முன் வாரா (உமக்)

(2) பாவவிலங்கடி பட்டுவெணங்கமோ
டாவிபதைக்குதை யையோ
பாவியா னவலுடன்
கூவியும் பூவினில் (உமக்)

(3) மஞ்சுதினஞ்சொன்ன மாரிபொழியுங்காஹிர்
மன்னரப்துல் காதிர்குமாரா
கெஞ்சுமப் துல்லாவென்மேல்
கொஞ்ச மிரங்கா. (உமக்)

பதம்.

இராகம் - கமாஸ் - அடதாளம்.

பல்லவி.

வருவாரோ வித்தருணம் - வந்தெனக்கருள்
புரிவாரோ வித்தருணம்

அநுபல்லவி.

சருவதயாபரனின் ஷறகுநெறிவளர்க்கும்
குருவாய்வந்துதித்தசீர் குதுபுமறொலியென்முன். (வரு)

சரணங்கள்.

(1) என்னைச் சொந்த னெனவுமே - யிடாகலவி
ரூங்கிதயை செய்யவுமே
இன்ன மென்காதல்தீர - மின்னம்போலிவ்வகத்தில்
முன்னமா னனந்தரி
சனம்சொப் பனத்தாயினும் (வரு)

(2) கன்னுஸ் வினையிற்புக்கி - காரிகையெனும்
மின்னூர் வலையிற்சிக்கி
எங்காளு முக்கியுலர்ங் - கிதயம்பதைக்குமெனின்
இக்கட் டகற்றிவிக்சத்
திக்கெட்டோர் புகழ்வொலி (வரு)

(3) வேதக்குரு னெப் போதும் - வீதிகடோறும்
வேதிய ரோது நாதம்
கீதநந்தம்போல் தொனி கீர்த்திசேர்காஹிர்நகர்
தாதனு கியவீந்துல்
லாதினமும் போற்றிட. (வரு)

பதம்.

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

மாதேவிரகமதிப் போதேயெனது குல
தாதையவர்சமுக மீதேமிகவாகுதே.

அநுபல்லவி.

வேதமுற்றுராய்ந்தவர்நன் னீதத்துடையவர்சங்
கீதத்தொனியெனும்திக்கிறுமுழக்கவே
விண்ணவர்புகழுவருதா - புரத்ததிபர்
என்னுமகாபுண்யமனத்தார் அருளொழுகும்
வித்தகஷேன வாநந்து
நித்திடும் உம்ருவியில்
வேளையவ ரிருபொற்
ருளேதந்தாள நினைந்து (மாதே)

சரணங்கள்.

(1) மஞ்சரஞ்சிதர்க்குமெழில் பஞ்சணைச்சிவிகை விண்மேல்
மாற்றோர்முன்னேகிடாது ஏற்றுமுதியோர்
மங்குனிகக்கொண்ட கரத்தார் - கதிர்க்குமுய்யர்
திங்கள்போற்றுலங்கும் வரத்தார் - அநுதினமும்
வல்லோன்திருச்சமுகஞ் செல்லவேகல்லுபதேச
வாக்ய ரெனுமதிக
யோக்யர்தமை யேநினைந்து (மாதே)

(2) அந்தரத்திராக்கதிர்நீ நீந்திடத்தாம்பூலருந்தும்
அண்ணலெனவுதித்த கண்ணியரடி
ஆரணமனைத்து முணர்ந்தோர்-நடைப்பாதைகாண்
வாரணஞ்சுட்டவே நடந்தோர்-மரித்தாகிந்தி
ஆவியோடெழுவருளுந் தேவரீர் - என்னையேபுவக்
தாளுமன்ன ரெனுந்த
யாளர்தமையே நினைந்து (மாதே)

(3) மாட கூடமேடை மெத்தை வீடதி நினங்கடோறு
மாத ரெழுந் தோதுங் குருன் நாதந் தொனிக்க
வான ரம்பை வாழ்த்தி நிற்கவே - அமரரோடு
தினவர் யாரு மதிக்கவே - வளஞ்சிறந்த
மாநக ரெனுங் காஹிர்க் காதின ரப்துல் காதிறொலி
மைந்தர் தமை யுளம்நி
னைந்த வப்துல்லா வெனித (மாதே)

இஃது

காயற்பட்டணம், "நைக்கா"

ஷெய்கப்துல்காதிறு ஒலிகள் நாயகம்

அவர்கள்மீது

கட்டளைக்கலித்துறை.

தருவென்று பாவலர் சாற்றுவ தன்றியித் தாரணியோர்
உருவொன்று காண்கிலா துங்கா ரணச்செய லொன்றையன்றி
கருவொன்று சங்ககஞ்சூழ் காஹிர்ஷெய் கப்துல் காதிறவே
சருவலோகர் புகழ்மேரே நிகழ்நைக்கா சாஹிபுவே.

பதம்.

இராகம் - ஹிந்துஸ்தானி - ரூபகம் - தாளம்.

பல்லவி.

சருவலோகர்புகழு மேரே - தைக்கா
சாஹிபொலியென்றேத்தும் பீரே

அநுசரணங்கள்.

(1) திருவளருநன்னெறி யோங்க - இந்தச
சிறியனென் றுயராதுநீங்க
தருநிகர் தாளருள வாரும் - தைக்கா
சாஹி பொலியென்றேத்தும் பீரே (சரு)

(2) வஞ்சனிபுலிஸோடுற வானேன் - அவன்
மாயவலைக்குட்சிறை யானேன்
தஞ்சமுமைநம்பி னேனுன் - தைக்கா
சாஹி பொலியென்றேத்தும் பீரே (சரு)

(3) படிமீதிலநுதினந் தேடி - பழம்
பாடுஞ்சொந்தனென்னைநீர் நாடி
சடுதியில் வராதென்ன மோடி - தைக்கா
சாஹி பொலியென்றேத்தும் பீரே (சரு)

(4) வையம்புகழ்வகுதை யூரா - எங்கள்
வள்ளலுமஹெருலிகு மாரா
செய்யுந்துதி அப்துல்லா சிரா - தைக்கா
ஷெய்கப்துல்காதிறெனும் பேரா. (சரு)

பதம்.

இராகம் - சம்பிரம் - அடதாளம்.

பல்லவி.

தருமசிங் காரா - தலம்
புகழுலல்ங் காரா - ஒலியே

அநுபல்லவி.

தரும சிங்கார - வொலியே
தரும சிங்காரா
சருவலோகர் புகழுந் தைக்கா
சாஹிபென்பேரா ஒலியே (தரும)

சரணங்கள்.

(1) வுறும்மெடாமற்றினமும் - வந்தருள்தாரா
கருமவினை பலவும்போக்கிக்
கருணைசெய்மேரு ஒலியே (தரும)

(2) பஞ்சையான்மிகக் கெஞ்சுறேன் - என்றன்சஞ்சலந்திரா
தஞ்சமென் நிறைஞ்சுமிந்தத்
தமியனைப்பாரா ஒலியே (தரும)

(3) இறையருள்கௌதுலஉலம்காம - மிலங்கிடும்பேரா
தரையிலொலிகட் காசுரான
தவத்ததிகாரா ஒலியே (தரும)

(4) நல்லமல்லிகைமுல்லைவாசனை - நற்காஹிரூரா
சொல்லொணுப்புகழ் சேருமஹுலி
சுகிர்தகுமாரா ஒலியே. (தரும)

பதம்.

இராகம் - கமாஸ் - திரிபுடைதாளம்.

பல்லவி.

செம்பொற்சரணம்பினேனுன் - ஷெய்கப்துல்
காதிறுவொலியே குத்பே - தினம்.

அநுசரணங்கள்.

(1) அம்புவியினி லபயமென்றுமையே
அனவரதமென்னகம் தேடுதேபுகழ்
பாடுதே - புகழ்
பாடுதே - தினம் (செம்)

(2) மங்காமதியே மனமதிரங்கியே
வரமருள்புரிந்திட லாகாதா - வினை
போகாதா - வினை
போகாதா - தினம் (செம்)

(3) பைய ஞேயறவே பாகதிபெறவே
பட்சமுற்றேனீ ரிந்நேரமே - என்முன்
வாருமே - யென்முன்
வாருமே - தினம் (செம்)

(4) ஆரம்புடைசூ ழணிகாஹிரப்துல்லாக்
கருள்தருமுமறுலி பாலரே - குண
சீலரே - குண
சீலரே - தினம். (செ

பதம்.

இராகம் - மோகனம் - ஏகதாளம்.

பல்லவி.

மோகமிக வாகுதையா
மோடிசெய்ய லாகாதையா.

அநுபல்லவி.

வாகைசூழுந் தென்வகுதை
வாழுந்தைக்கா சாஹிபுவே. (மோக

சரணங்கள்.

(1) உருகுதுமைத் தேடியுளம்
உள்ளடக்கக் கூடாதையா
அரவிந்தத் தாள்தரவென்
அருகிலின்னம் வாராதேதோ (மோக

(2) வஞ்சிமாயை யினுலென்
மதிக்கின மாகுதையா
நெஞ்சத் துயரகல
நித்யாநந் தத்தைநாடி (மோக

(3) கன்னல்செறி சோலைசூழ்
காஹிருமறுலியாலா
அண்ணல் ஷெய்கப்துல்காதி
றருளப்துல் லாவின்மூலா. (மோக

௧௫.

இராகம் - காம்போதியக்ஷ ஏகதாளம்.

கண்ணிகள்.

(1) வாராயோ வீதக்காசாஹிபொலியருள்தேடி
வசந்த - ஆஹா - அழகின்றலத்தைநாடிநீ (வா

(2) க்ஷராய்கித்ய குருனேடு சோமசுக்கிர வாரம்
குணமாய் - ஆஹா - குலவும்ருத்திபலங்காரம்நீ (வா

(3) பாராய் பாவையாடவரகந்தங்கோடி
பரிவாய் - ஆஹா - பாக்யம் பெறலாமிதோவோடிநீ ()

(4) மாருப்பூம்பொழின்மீது மயிலினமாடும்
வளமாம் - ஆஹா - வகுதைத்தைக்காவதை நாடிநீ(வா)

பதம்.

இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

பல்லவி.

புது மலர்ச்சரண மெப் - போதியான் தரிசனம்
புவிதனிற் காண்பே னையா - வல்ல
பதியோ னருள் மறை பொழியும் பூபதியெனும்
புண்யதைக்கா வொலியே.

அநுசரணங்கள்.

(1) நித்தம் கரைக் குருகுஞ் சிற்றனு ஷமைத் தரி
சித்திட வருள்கோனே - யென
தத்தனீர் சற்றிரங்கி சித்திதா வணங்கி
மெத்தக் கெஞ்சுகிறே னனே. (புது)

(2) உம்மை யல்லாம லெனக் கன்னே தந்தை யில்லையென்
றுமக்கது தெரியாதா - தமக்
குற்ற பிள்ளை யெனநீ ரித்தருணந் தயவ
ளித்திடா திரும் வாதா (புது)

(3) அதி சவுந்திர மயிலாடக் குயில் கிளிபு
ருவன மிசை பாடும் - அந்தப்
பதி காஹிரு மஹ்ரூவி பால ரப்துல் காதிறே
கதி யப்துல்வா பெறநம் (புது)

பதம்.

இராகம் - புந்நாகவராளி - அடதாளம்.

பல்லவி.

ஐயா வென்நாளும் ஆதரித் தாளும்
பையநீ ரிரங்கிப் பரிவாகவே கேளும்.

அநுசரணங்கள்.

(1) வையம் புகழ் மறை யோர் வந்துறை காஹிரில் வாழ்
வள்ளலு மஹ்ருலி ஸ்மத்தரெங் கோனே - வரக்
கெஞ்சுறே ஞனே. (ஐயா)

(2) அன்னை தந்தையிழந் தழுஞ்சிசுப் போல் வாடி
அனவ ரதமும் பாத தரிசன நாடி - அடைந்
தேன்கதி தேடி (ஐயா)

(3) கத்தாவித் தருண நீர் கைவிட லாமா
கருணை செய் தாலென்ன கைப்பொருள் போமா - கடைக்
கண்ணோக்குஞ் சீமா (ஐயா)

(4) கொஞ்சுங் கிளி மொழியாள் குரவை யெப்போதுங்
குலவுங் காஹி ரப்துல்லா நேர் புகழோதும் - குது
பொலியே தப்பாது (ஐயா)

பதம்.

இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி.

மானேமையலானேன்
மனஞ்சகிக்குதில்லையே - யடிமானே

அநுபல்லவி.

எனேகுறை யினியென் செய்குவேன் - அடி. (மானே)

சரணங்கள்.

(1) கோனுமஹ்ருலி பெருமபாலர்
தானேனருளுந்தைக்காசாஹிபொலியவர் மீதில் (மானே)

(2) சாகரம்போலாகு தென்னைவல்
தாதியவரிடஞ்சென் றோதிநீவருவாயடி (மானே)

(3) புண்ணுலுளமெலி கிறேனே [த்த
மண்ணிலொரு முறையென் கண்ணின் முன்காணுதுமெ

(4) பாவிபொறி கலங்கிவாடப்
பார்த்திருந் துமிரங்கி தேற்றுமையா லேலீதம் (மானே)

(5) தேமாரிபொழியு நக்காஹிர்
தேவாதிதேவர்தொழும் செய்கப்துல் காதிர்மீதின் (,,)

பதம்.

இராகம் - இரிமடக்கு - ஏகதாளம்.

பல்லவி.

சம்புகழ்சாயுட்சயரே - சிருறுமெய்ப்ர
சாதாபதமதை சதாநம்பினேன் தாவந்தமதாயான்
தைக்காசாகிபே சதாநம்பினேன் தாவந்தமதாயான்
மம்ம - சுக - மே - மா
தாவந் - தம - தா - யான்

அநுசரணங்கள்.

(1) சண்பகமலர்கள் திகழுநற்சோலை
ஜகம்புகழ்கமல தடவயலாலே கஞ்சூழுந்
சதுவீதி - கந்திக்கும்பூமாலை
கலைகாஹிர்மாலே (சம்பு)

(2) உத்தமசத்குரு வெனவுமைநாடி
உளகதியுமையென் றுருகியேதேடி
உடனேவிரைந்து கவிபாடி
உணர்வனதக்கூடி (சம்பு)

(3) அடியேனென்றனைவந் தாளாதேதோ
அபயம்வைத்தாலென் னயர்வகலாதோ
இது நீதோயடி மீதிந் பாவநீங்காதோ
பரிசளிக்க வாதோ (சம்பு)

(4) காருண்யருமறு கருதுபூபாலா
கர்த்தர் செய்கப்துல் காதிறென்சீலா
செங்கோலா கவிதைசெய்யப்துல்லாக்கநுகூலா
அருள்சேர்க்குநூலா (சம்பு)

பதம்.

இராகம் - கமாஸ் - ஏகதாளம்.

பல்லவி.

தையலே மையலாகி னேன்
தையலே மையலாகி னேன்.

அநுசரணங்கள்.

(1) ஐயமகற்றுமெனையர்த்தைக்காவொலிக்
காருரைப்பாரடி நாரியேயென்னுளம்
வையகமீதவர் செய்யூதாரவிந்தத்தை
வாழ்த்தித்துதித்திலுந் தோத்திரஞ்செய் (ஐய)

(2) ஆசைஜலப்பெருக்கனை கடந்தோடுது
ஆதலினுன்மிக வகமெலிவாகுது
காசினிதன்னிலென் கருத்துக்கிசைந்து
காதலியேவந்தால் போதுமெடி (ஐய)

(3) அல்லும்பகலவ ரல்லாலினியில்லை
ஆதரிக்காவிடில் அபயம்வேறில்லை
பல்லவர்க்குதவுஞ்சா பல்யமானவர்பால்
பட்சமுடனேசென் றிச்சணஞ்சொல் (ஐய)

(4) தேமலர்சூழ்காவிரி சிறுமருலிபெறும்
செய்கப்துல்காதிறு சீக்கிரமாகவே
நாமயிலேயென்றன் மாசகற்றவிந்த
மைந்தனப்துல்லாறுன்வந்திடவே (ஐய)

பதம்.

இராகம் - பைரவி - ஏகதாளம்.

பல்லவி.

செந்தாமரைப்பதத்தை நாடி - சிறியேனிதோ
வந்தேனுளமிகவே வாடி

அநுபல்லவி.

மந்தாரநிறை பலகாரும்
மணக்குமாமுல்லை மலர்வனஞ் சூழும்
மந்தரக்கரத்தினர் தொளையது நீரும்
வளர்குமுகர்வதை யிலீவாழும்
மாதவருமற்றவ மேதகத்தால் வரும்
நாதரென்செய்கப்துல்காதிறுவொலிதிரு (செந்த

சரணங்கள்.

(1) பதிதனிற் பழமதிதெனப்பலர்
பகர்ந்திடுநோம் - பரிவுடனே
பசுமையுடனே மித்தங்கனிகுலையோ
டளிக்கவெல்லோரும் - பதம்பணிந்து
இதுபோலேயில்லை யெங்கும்புதுமை
யெனவேபுகல்வோரும் - இனியதித்திப்
பிதுசுவனவர்புசித்திடு கற்றேனெனப்
புகழ்வோரும் - எவருங்கூறும்

இன்பகற்றுமா னீம்பதின் பாலே
இனித்தவமுதனைழத் ததின்பொருட் டாலே
அன்புடனெல்லவர்க் கிங்குமப் பாலே
அருந்தினோர்கள்துதித் தார்கள்மென் மேலே

ஆதியருளுந்திரு
வேதமனைத்துமுணர்
நாதமென்வெஷ்யுபதுல்
காதிறுவொலிதிரு (செந்தா)

(2) அமரர்க ளநதின மணிவருப்
போடிசைபாடும் - அரம்பையர்கள்
அணைவருமுறை வண்ண மாய்நடன
மிகவேயாடும் - அழகுறுநல்
இமையொடு குயிலினங் கிளிபல
மிகுதமாய்ச்சாடும் - இனம்வானர
வினமலைவனமதிற் றினங்குதித்தேவிளை
யாடும் - இனித்தா ரேடும்

எண்ணுறுதபுகழ் சூழ்காவி ரூரர்
எந்தலாமுமற் வரத்தினுை யாரர்
விண்ணவர்பணிந்திடு மேலதி காரர்
மிடியகனவப்துல் லாவென்றன் பேரர்

மேகமதற்கிணை
யாகியகொடையிரன்
முகமரோதுங்கைக்கா
சாதிபுலிதிரு. (செந்தா)

பதம்.

இராகம் - கல்யாணி ; ஏகதாளம்.

பல்லவி.

மோகமிக வாகுதையா.
மோகமிக வாகுதையா
மோகமிகவா யுள்ளம்வாடியே
மோகமிக வாகுதையா.

அநுபல்லவி.

சாஹிர்மாநகருரா காவலுமறின்குமாரா
தைக்கா - சாஹிபென்பேரா
மோகமிக வாயுள்ளம்வாடியே (மோக)

சரணங்கள்.

(1) கன்னியர்வலைபின்னி காணுமாயைவிட்டென்னை
காவு - கருணைக்கண்மணி
மோகமிகவாயுள்ளம் வாடியே (மோக)

(2) ஆதிமாமறைநூலா - அனைத்துமுணர்செங்கோலா
எனக் - கருளுமநுகூலா
மோக மிகவாயுள்ளம்வாடியே (மோக)

(3) கொற்றவர்மிகச்சூழும் குடிகொள்வகுதைவாழும்
பயல் - அப்துல்லா நாளும்
மோக மிகவாயுள்ளம் வாடியே. (மோக)

தரு.

இராகம் - மோகனம், அது, ; ஏகதாளம்.

பல்லவி.

அன்னமே மன்னரை
யழைத்துவாபோடி சொன்னமேயடி

(1) மன்னனருளும மெருலியின்
மைந்தராங்னீதக்கா வொலியடி (அன்)

(2) ஆசைவெள்ள மீறுதடி
ஆவல்தீர வராதேதடி (அன்)

(3) பாரிகிளேங்கே யுருகும்
பையல் மையல் தீர்வேயடி (அன்)

(4) செங்நெல் வளர்ஞ்சூழுங்காஹிர்
செங்கப்துல் காதிருமடி. (அன்)

௩௩.

இராகம் - எசல்தேசிகம் - ஏகதாளம்.

கண்ணிகள்.

(1) போகலாம் வாராய் சகியே - பூங்காஹிரூர்தன்னைநாடி
சாகரமெய்ஞ்ஞானர்தைக்கா - சாஹிபுறௌலாவைத்தேடி.

(2) வேதகுருஸலவாத் - தோதும்ஹிஸ்-போசைகளும்
காதலுடன் கேட்கவென்றன் கல்புமையலாகுதடி (போ)

(3) திங்கள் வெள்ளி ராத்திபுடஞ் சிறப்போடு மௌலிதெனும்
சங்கைமது ஹோதுந்தைக்கா சாஹிபு றௌலாவைத்தேடி.

(4) கற்றோருமற்றவருங் காவலருங் கருதிவரும்
எத்திசையோர்போற்றுமெங்கள் ஏந்தல்றௌலாவைத்தேடி

(5) ஜாதிகுலப்பெண்களுஞ் சங்கையுள் ளோரெவரும்
சாதகமாய் வந்திறைஞ்சும் சாஹிபு றௌலாவைத்தேடி ()

(6) சொர்க்கத்தரம் பையர்கள் சூழவிண்ணவர் சஹ்றவா
நற்கரத்தி லேந்தியூட்டு நாயகர் றௌலாவைத்தேடி (போ)

(7) மல்லிகைமுல்லைரோஜா மருக்கொழுந்து சந்தனமும்
அல்பகலும் பரிமளிக்கும் ஆண்டகை றௌலாவைத்தேடி

(8) சுத்தபசுந்தங்கமும் சொல்லொணு விநோதங்களும்
வைத்தமைத்தி லங்குகின்ற வாகையர் றௌலாவைத்தேடி

(9) முத்துப்பவளம் பச்சையோ டுற்றநவரத்தினமும்
சுற்றிவைத்திழைத்தசுபசோபன றௌலாவைத்தேடி.

(10) மாடப்புறாவினங்கள் வாழ்த்தும்பல வண்டினங்கள்
கூடிக்குதித்தாடுகின்ற கோமான் றௌலாவைத்தேடி.

(11) வண்ணமயில்களாட மாங்குயில் சங்கீதம்பாட
பண்ணுமப்துல்லாபதமும்பாடிம்றௌலாவைத்தேடி.(போ)

ஏசல் சிந்து.

இராகம் - ஹிந்துஸ்தானி - பேமரி - ஏகதாளம்.

ஏகபல்லவி.

(1) தரு—மஞ்சஞ்சுஞ் செஞ்சரணம்
நஞ்சந்தஞ் சந்தருணம்
வாகுலவும் - காஹிர்தைக்கா - சாஹிபே நிதம்
வந்தாத - பந்திர - வாத - மாதவா (தரும)

(2) உல—கெங்கெங்கு மெங்குருவே
ஏந்தலப்துல் காதிறுவே
ஈனமறுங்கோனே தைக்காசாஹிபே எனக்
கின்பந்தந் தம்பம்பன் மீயுநாயகா (தரும)

(3) எந்தன்—புந்திமயலாகுதையா
பொழுது வீணுப்போகுதையா
போதமருளுதர் தைக்காசாஹிபே இது
பொய்யா வெனையாவென் செய்வேன் தாயகா (தரும)

(4) என்மீ—தின்னம்பாராமுகமோ
ஏழைக்கிரங்கா மனமோ
ஏதென்றறியேனே தைக்காசாஹிபே எனை
எந்நாளு மன்னுநீ ரென்னு நண்ணுமே (தரும)

(5) மிகு—பாக்கியரும் ருலிகுமாரா
பையலப்துல்லா வென்பேரா
பாருமருள்தாரும் தைக்காசாஹிபே இறை
பாசாவி சேஷப்ர காச ரக்ஷகா (தரும)

காயத் பட்டணம்

தைக்கா கந்தூரிச் சிறப்பலங்காரம்.

இராகம் - தேசிகதோடி - ரூபகதாளம்.

ஏகபல்லவி.

(1) பத்மினி ஜாதிப்பெண் மானே - பகர்
தேனே - பகர் வேனே - உன்றன்
பாங்கினில் வீற்றிருப் பேனே - புகழ்
பாடப்பல வித வின்னம்
கூடத்தா மத மென்ன
பாரூறுங்காஹிரின் மீது - தைக்கா
சாஹிப்கந்தூரியிப் போது (பத்மினி)

(2) காவல ராமுமர் பாலர் - குண
சீலர் - அறு கூலர் - நமைக்
கைதாங்கும் ரட்சக மேலர் - உயர்
ககனப் பதியோர் போற்றும்
மிகுதம்புவியோ ரேத்தும்
கண்டதெல்லா மவர் புதுமை - சொல
வுண்டுமோ யாவர்க்கு முதுமை (பத்மினி)

(3) வேதகுருன் சுவி சேஷம் - விசு
வாசம் - உப தேசம் - ராத்தி
போதுகின்றார் பவ நாசம் - இனு
மேகக்கதிர் போலுரு
வாகச்சுடரைத் தெரு
வீதியரங் தெங்கும் வீசும் - எந்தப்
போதுங் கிந்தில் பிர காசம் (பத்மினி)

(4) மல்லிகை முல்லைப்பூந் தாது - மலர்ப்
போது - ஜக மீது - தரும்
வாசமெங்குங் கிடை யாது - அந்த
வாடாமலிகைச் சூடியே
சோடாப் பாலகர் கூடியே

கீர்த்தனாரஞ்சிதம்.

மாட்டுக்தாயிரு விஜேனசை - செவி
கேட்டு மென்மேலுமே யூாசை (பத்மினி)

(5) மாடப்புறுவன்ன மோகும் - மயி
லாடும் - குயில் பாடும் - துய்ய
மாதவர்தம்மனை நாடும் - இறு
வஞ்சிக்கொடியிடை யாளர்
மிஞ்சப்புகழ் ஸலவாத்தை
வாஜேர்மகளிருங் கண்டு - இங்கு
தானமர்ந்தார்மகிழ் கொண்டு (பத்மினி)

(6) நீஜேர்புகழ்ந்திம் வீடு - எதிர்
கூடு - மணி ஸேடு - இல்லைத்
தேசமெங்குமிதம் கீடு - அதில்
சிளிபா லோடினிய
தேனின்மாரி பொழிய
தென்றல்பரவு முல் லாசம் - எங்கும்
மண்டும் பரிமள வாசம் (பத்மினி)

(7) வாஜேருலவுங் கைலாசம் - பிர
காசம் - பா ஜேசம் - அதை
மாஹுமிதே விசு வாசம் - புவி
மாந்தாத பாகக்கா
யேந்தித்தின மேயோதி
வாழ்த்தும் தலமிது நாமே - தினம்
தாழ்த்தும் வினையைக்கொய்தோமே (பத்மினி)

(8) எங்கோமுஞ் ஜனக் கூட்டம் - மன
நாட்டம் - நிறை வேற்றம் - எங்கள்
ஏந்தல் கந்தூரி கொண் டாட்டம் - மிகு
ஏதக்கட விடைபட்டு
நீதக்கட வதைவிட்ட
எந்தன் துயரத்தை நீக்கி - அருள்
தந்திடுவார் கண்ணு நோக்கி (பத்மினி)

(9) ஏதிரைப்பே ணிக்கக் காட்சி - அர
சாட்சி - இறை மாட்சி - இங்கே
எய்திஞேர்க்குப்பவ மீட்சி - இனும்
ஈனக்கனை இலேயுற்று
மீனக்கனை நிலேகெட்ட
எல்லவர்க்கும் அருள் கூடும் - நல
வல்லவரென் புகழ் சூடும். (பத்மினி)

(10) அன்பன் காயற்பதி வாசன் - அவர்
தாசன் - விசு வாசன் - புகல்
அப்துல்லா வென்னுமுவ் னேசன் - எனை
ஆளக்கட வதுவென்று
நீளக்கதறியே நின்று
ஆதாரமென் றவர் பதமே - மலர்ப்
போதாரமே வந்தேன் சதமே. (பத்மினி)

இஃது
காயற்பட்டணத்திலவதரித்து பட்கலாவில்
அடங்கிவிளங்கும்

தைக்கா ஷெய்கு முகம்மது ஸாலிகு ஒலியுல்லா

அவர்கள் மீது

கட்டளைக்கலித்துறை.

நீடுவோன் பூமி கிறவும் பராபர கிஷ்களன்றுன்
நாடுவா ருள்ள நடுவே மகிமை நடனமிட
சாடுவா னென்ற தருண முஹம்மது ஸாலிஹுவைத்
தேடுவாய் கண்ணே கீகத்கரி யாம்காயில் ஷெய்கொலியே.

பதம்.

இராகம் - வசந்தம் - மோகனதாளம்.

பல்லவி.

கண்ணே நீகற் கதிபெறவே
காயில்ஷெய்கைத் தேடுநிதம்
தாயில்ஷெய்கை தேடு (கண்மணி)

அநுசரணங்கள்.

(1) முன்னேமயிலாயிருந்து முறுசல்க்ஷிபதியாய்வந்த
நன்னபிமெற்றிநடத்தும் நாயகரைத்தேடுவிதம் நாயகரை (கண்)

(2) துற்சனன்கன்ஞசின்வினை ஆரிதமாயகற்றிவிக்கும்
இச்சகத்திரட்சகரை இச்சயுடன்தேடுகித மிச்சயுடன் (கண்)

(3) பூதலமமைத்தளிக்கும் பூறணன்றனருள்பெறவே
நாதர்முஹம்மதுஸாலிஹு நற்குருவைத்தேடுகித நற்குருவை

(4) கன்னல்வளர்சொலைசூழும் காஹிறும்மெருவிபெறு　[மை.
மன்னர்தைக்காசாகிபருள் மைந்தர்தமைதேடுகித மைந்தர்த

பதம்.

இராகம் - பைரவி - சாப்புதாளம்.

பல்லவி.

செங்கோல்செய்யும் ஷெய்கைத்தேடி செல்வோமடீ - அவர்
செந்தாமரைப்பாதநித்தம்　　புல்வோமடி.

அநுபல்லவி.

பங்கமுறுதுநம்மைப் பாங்காகவேநடத்தும்
வங்கஷெனவந்துதித்தோரிவர்தா மெடி　　(செங்)

சரணங்கள்.

(1) தக்கோனருள்பெருகு　மெய்க்கோனடி - அவர்
தம்பமில்லால்வேறு　நமக்கின்யேதடி
எக்காலமும்புகழ்சேர் ஏகநபிநன்னெறி
மிக்கவழிகாட்டிடுஞ்சற்　குருவாமடி　　(செங்)

(2) வெற்றிபெறுங்காதிரியா　ஷெய்காமடி - ஆர்க்கு
வேந்தரெனவந்ததுரை　ராஜாடி
பற்றிப்பிடிக்கமெத்தப் பாத்திபராமெவனும்
பாரினருள்பெற்றகுரு　இவர்தாமடி　　(செங்)

(3) எங்கும்புகழுங்காஹி　ரூராரடி - எங்கள்
ஏந்தல்தைக்காசாஹிபருள்　செல்வரடி
அங்கமுருகுமப்துல் லாவைரட்சிக்கும்பிர
சங்கமுஹம்மதுஸா　லிஹுநாதரடி.　　(செங்)

பதம்.

இராகம் - ஹிந்திஸ்தானி - டோமரி - தாளம்.

பல்லவி.

மாமயிலே வோடியென்
மன்னரைப்பேசய்க்கூட்டிவாடி.

அநுபல்லவி.

தாமதியாதெனக்கவர் தாளினைத்தந்தாள்வதற்கு. (மா)

சரணங்கள்.

(1) மோகமிகவர்குதடி முகத்திரக்கம்பாராரோடி
தாகமதைதீர்த்தேயென்னைத் தாபரிக்கவேசொல்லடி (மா)

(2) தாவியவர்பாதமலர்த் தஞ்சமெனநம்புமித்தப்
பாவிமனஞ்சகிக்ககூடா பரதாபமதைச்சொல்லடி (மா)

(3) வர்கைசூழும்தென்வகுந்தை வாழுந்தைக்காஸாஹிபருள்
ஷெய்கு முஹம்மதுஸாலிஹைஹச்சித்தம்வைத்தாளச்சொல்லடி

(4) அண்டியவர்கைப்பிடிந்தும் அண்டாவிதமேதுகண்ணே
தொண்டனைப்துல்லாவுக்கவர் சுமுகங்கண்டேசொல்லடி (மா)

பதம்.

இராகம் - சமாஸ் - ஏகதாளம்.

பல்லவி.

எப்போதினிக்காண்பேனடி
எந்திழையே நானறியேன்.

அநுபல்லவி.

ஒப்பிலடங்கா னொலியை
ஓங்குபுகழ் மாநிதியை. (எப்போ)

சரணங்கள்.

(1) வாடிமெலிந்தேயுருகி வானுல்லீனைய்போகுதடி
தேடிமையலாகுதடி சேடியிதர்க்கென்செய்குவேன் (எப்)

(2) தீங்குளனைவாட்டுதடி தீராத்துயராகுதடி
நீங்காவென்றன்பிணியை நீக்கியருள்தந்தருள (எப்)

(3) என்ன தாமத மவர்க்கு ஏதுகாரணந் தெரியேன்
கன்னல் மொழி மாதரசே கண்ணியரென் றனையாள (எப)

(4) என்துரை வாராதிருக்க என்ன குறையான் செய்தேனோ
பன்னு மிந்தப் பாவிமுகம் பார்த்து பயபதம் பெறவே (எப்)

(5) பல்வளஞ் சூழும் வகுதை பாக்யர் தைக்கா சாகிபருள்
செல்வ மணியாக வந்த ஷெய்கு முகம்மது ஷாலிகை. (எப்)

பதம்.

இராகம் - எதுகுலகாம்போதி - மிசரகதிதாளம்.

பல்லவி.

இனும் வரக்காணேனு
னேதூ செய்வே னெந்தாதா.

அநுசரணங்கள்.

(1) மனமிக வாடுது மாமோக மீறுது
மன்னரைத் தேடி மையல் பெருகுது (இனும்)

(2) அலறிநும் பேர்சொன்னுனுக் கத்திய வளைவிட்டு
கதறியே யோடச் செய். காரண முள்ள நாதா (இனும்)

(3) அரவதுந் தாள்தீண்ட அச்சண மதுசாவு
வரம னருள் படைத்த வரக்யர் ஸாலி ஹொலியே (இனும்)

(4) அன்னவலொலி ஜிபுரீ அமையு மகாமில் பூவை
கண்ணிய மாயழைத்த காரணரே நீரென்முன் (இனும்)

(5) வாசங் கமழ் வகுந்தை வளருந் தைக்கா வொலிசேய்
நேச முடனே யப்துல் லாவெனே யாள் வதற். (இனும்)

பதம்.

இராகம் - தேசிகம் ஆதிதாளம்.

பல்லவி.

நயமருள் தாளிணை நாடு திப்போதே

அநுசரணங்கள்.

(1) உயர்காஹிரூரா உமறொலி பேரா
ஜெயதைக்கா ஸாஹிபின் செல்வக்குமாரா. (நய)

(2) தின முமைத் தேடி தியங் கிறேன் வாடி
மணமு வந்தென் முன்னீர் வந்திடுங் கோடி. (நய)

(3) கழனிகள் வாடிக் கருகிடும் வேளை
மழையழைப் பித்தீரிக்க மாநிலம் வாழ்க (நய)
(4) பகரு மப்துல்லா பலனுற மேலா
சகல கலாமுகம்மத் ஸாலிஹென் மூலா. (நய)

பதம்.

இராகம் - அரசகல்யாணி - அடதாளம்.

பல்லவி.

ராஜமகாராஜரேநீர் ராஜமகாராஜரேநீர்
ராஜசரணம் சரணம் சரணம்.

அநுபல்லவி.

தேசமெங்கும் புகழ்பெருகும்
ஷெய்குமுஹம்மதுஸாலிஹே-ஜெயவ-ஜெயவ-ஜெயவசரணம்

சரணங்கள்.

(1) சத்யகுருமகத்வதுரையே தயவெனக்கருளும்மிறையே
சரணம் - சரணம் - சரணம் - சரணம் (ராஜ)
(2) சந்த்ரவதனரேயான்வாடி சந்தத்முங்கள் தாளைநாடி
சரணம் - சரணம் - சரணம் - சரணம் (ராஜ)
(3) தாசனப்துல் லாவின்கோவே ஷைக்காஸாலிஹ் பின்றபூவே
சரணம - சரணம் - சரணம் - சரணம். (ராஜ)

பதம்.

இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

கண்ணாலெனைப்பாராதேதையா - கருணைநாதா. (கண்)

அநுசரணங்கள்.

(1) மண்ணோர் விண்ணோர் புகழும் மன்னர்முஹம்மதுஸாலிஹே
இன்னமிரங்காததேதையா - இனியென்செய்வேன் (கண்)
(2) எப்போதும் பாதகதி இறைஞ்சியெளியேன்துதித்
தப்புறப்படுவேனுவனோ - அவனிதனில் (கண்)
(3) பேதையர்கள் பாதைகாட்டும் பித்தனிபுலீஸை–மூட்டும்
காதுவினைதீர்க்கலாகாதா - கருதுப்பாதா (கண்)
(4) தவமாரி தயப்பண்ணே ஷைக்காஸாலிஹ்பின்கண்ணே
நவமாரப்துல்லாவின்முன்னே - நவிலுமன்னே. (கண்)

பதம்.

இராகம் - கமாஸ் - திரிபுடை தாளம்.

பல்லவி.

அந்தமிகு சுந்தரரே வந்தனம்.

அநுசரணங்கள்.

(1) நந்தவனம்புடைசூழ் நறும்வகுந்தையாதிபா
எந்தாபழந்திர வரமீகவே (அந்த)

(2) ஆசைமயல் பெருகியணைகடந்தோடுது
நேசமதாய்வந்தெனையாள்கவே (அந்த)

(3) மங்காத்தவமதியே மலரழைத்தவதியதியே
பங்கம்வராமல்முகம்பார்த்தருள் (அந்த)

(4) காஹிறெனும்பதிதைக் காவொலிசந்ததியே
மாஹிர்முதறம்மதுஸாலிஹ்-ல்வொலி. (அந்த)

பதம்.

இராகம் - மங்கலகௌசிகம் திசிரஜதி - ஏகதாளம்.

கண்ணிகள்.

(1) அண்ணலேயென்மன்னரே - ஸலாம்ஸலாம்
புண்ணியந்தரு விண்மணியென மன்னவரெவரும்
போற்று - மேற்றும் - பூரணாதிபா (அண்)

(2) ஆதலாலுமைத்தேடியே - வந்தேன்வந்தேன்
ஆதியில்வந்தசோதிக்கடலே நீதியாயுரைத்த
அன்பு - மின்பும் - அருளேசெய்குரு (அண்)

(3) ஏகனிடமன்றுமோதவா - தவா
எந்தவிதமுஞ்சிந்தையுவந்து சொந்தமாகவே
ஏழை - வேளை - யிரங்கியாள்குவீர் (அண்)

(4) காஹிரம்பதி வாழுங்கண்மணி - மணி
ஹாஜிஷெய்கப்துல்காதிறீன்றிடும்காமில்ஷெய்கொலியே
காவு - மேவு - காரணீகராம் (அண்)

(5) ஷெய்குமுகம்மது ஸாலிஹு-வொலியே - வொலியே
சித்தமகிழுமத்தனப்துல்லா - நித்தமும்புகழுஞ்
சீரா - நேரா - ஜெயசெம்பிரராம். (அண்)

பிஸ்மில்லாஹி.

இஃது

காயற்பட்டணம்

வித்வசிரோமணி

ஸ்ரீலஸ்ரீ

செய்னுத்தீன்புலவரவர்கள்மீது

மதுரைத்தமிழ்ச்சங்கவித்வான்

கீழக்கரை

சே. மு. செய்யிது முகம்மது ஆலிம் புலவரவர்கள்

இயற்றிய

பதிகம்.

வெண்பா.

தாரும் ஹிஜ்ரி தசமூன்று நூற்றிருபத்
தாரும் கடைமதிமூ வைந்துவெள்ளி—பேருரு
மன்னும் அஸஹ்ரின்பின் மால்செய்னுத் தீன்புலவர்
மன்ன னிடையடைந்தார் மன்.

அறுசீர்விருத்தம்.

எவ்வுயிர்க்கு முதலிறைவன் றனக்கிலகு புகழ்சலவாத்
தெழில்சலாமுங்
குவ்வுயிர்க்க முதலுருவாங் குருநபிக்கு மவர்தூதை
குழுவினல்லார்
தெவ்வுயிர்க்கு மறலியையேர் திறலஸ்ஹா புகட்குமுறை
செறிந்த நீர்வான்
குவ்வயிர்க்க மறைந்ததுமுன் செய்னுத்தீன் புலவரவை
குலவு மாறே. (க)

பொறிவாயி லைந்தவித்தீர் புகழ்தருமத் தொருவாயிற்
புகுந்து மேலாம்
நெறிமாதை நனிமணந்தீர் நிறைமாலை தனைப்புணர்ந்தீர்
நிகரில் ஞானத்
தறிவாரு முருந்தவத்தீ ரருள்சுரந்த பெருமிதத்தீ
ரணிகொள் வானே
பரிபிரிப் பாய்பழனத் தடவுகுதை செய்னுத்தீன்
பரிவல் லீரே. (உ)

ழுழங்குபுனற் சீறருவி முத்தையா புரமடைய
முதிரும் வேனி
லுளங்கருதி யுமைபடைந்தோ ருயரிறைபா லிரந்திங்
யோழிமி னென்ன

பதிகம்.

வழங்குமிரு கரமேந்தி மழையழைத்த புதுமையெவர்
வழுத்தற் பாலார்
களங்கமிலா வகுதைவளர் செய்னுத்தீன் புலவருமீர்
காமி லேறே. (௩)

அடல்வேண்டு மைம்புலனை யனவரத மெனநோற்று
அணுகும் யாவும்
விடலாகு மினிர்ஞானி செய்யிதஸன் மௌலானா
விழைந்தும் மேலா
மிடமேவி யிறையானை யிவரொலிமார் குழுவிலுள்ளா
ரெனவே போற்றுந்
தடமாரி தனுக்கருணை செய்னுத்தீன் புலவருயர்
தகைசான் றீரே. (௪)

என்னாவி யுளங்குளிர வன்னையென் றமதுவஸித
விடத்தி லார்ந்து
உன்னாது விதிவலியா லுமதுதய மதிவதனத்
தொளிரும் நேச
மன்னாத சிறுமதியேன் மடுவினிடை விழுந்துழலும்
வருத்தம் நீவிர்
இன்னாத பகர்ந்தறியீ ரெழில்செய்னுத் தீன்புலவ
ரிதயிக் கீரே. (௫)

மனதகத்து மாசிலர்நீர் மகிழ்வின்வளர் சேவலினை
மறைவின் வெஃகித்
தனதகத்து வரவருந்தும் சிம்மளவன் கரமதனிற்
றடித்து வீங்கிக்
கனதுயரந் தனிலிரியக் கவியருளுங் காரணரீர்
கவிஞர் மாடத்
தின்துயரம் பரவமுகிற் சிதைவகுதை செய்னுத்தீ
னிணை யில்லீரே. (௬)

அன்பதனை யடைகருவி யகிலமிசை கிடையாதென்
றன்பு கூர்ந்த
என்பதனை யுருக்கிடவே யிறைநாமந் துதிக்குமென்று
மெழிலோர் [illegible]ற்றும்
முன்பதியி னபிதான் மொழிந்திடவே சிலிர்த்துடல
முதிருஞ் சோதி
மன்பன்தக ளறியவருஞ் செய்னுத்தின் புலவருயர்
வாய்மை யீரே. (௭)

பாரோதும் புகழ்படைத்த பார்த்திபர்சேர் பாவவிரு
பாலி னோர்க்கும்
நீரோதிக் கொடுத்திவர்தங் நெடுந்துயர நிவர்த்திடுமா
நிமல நீவிர்
சீரோதக் கபுறகத்திற் புனலமைக்கத் திகழருளிச்
சிறப்பிக் கின்றீர்
பேரோதத் தடவகுணைச் செய்னுத்தின் புலவருயர்
பெருமை யீரே. (௮)

கொள்ளாத பொறியெனவே குறித்திடலை முமதரிய
குணத்தை யோர்ந்து
விள்ளாத விடநாவும் விரைந்துணரா மரச்செவியும்
விழைந்து காணும்
உள்ளாத விருதயமும் உவக்காத வவயவமு
மொழித னன்றே
புள்ளாரும் நனைமாலை புனைபுயத்தீர் செய்னுத்தீன்
புலவ ரேறே. (௯)

அழுக்காற வாவெகுளி யகப்பெருமை யஞ்சாமை
யகிதம் யாவு
மிழுக்காத வழுக்குடையேன் றழுக்கான்று படுந்துயர
மெவையும் நீவி
ரொழுக்காறு பூண்டிடவையு முரையாது உணர்வதிய
வுதவி செய்வீர்
வழுக்காத வொழுக்குடையீர் செய்னுத்தீன் புலவருயர்
மகிமை யீரே. (௧௦)

பிஸ்மில்லாஹி.

இஃது

நேரிசையாசிரியப்பா.

மலைமுளை யுலகின் மணிநிகர் காஹிர்
மலைவிலா தெழுந்த மாதவர் திலதம்
அஞ்சுமோ டாறு மிஞ்சிய நெஞ்சார்
சஞ்சீவி னியாத்த ஸதகத் தில்லா
தருமக மகவா யுறுமொரு தீபந்
தருநிகர் தெளஹீ தருங்கனி யுதவும்
உடுபதி சுலைமா னெலிதிரி மகவுள்
நடுநிலை பிறழா நடுவுறு ரத்னம்

நேரிசையாசிரியப்பா

மறைமொழி பிறவு மாசறக் கற்றோன்
நிறைமனத் தொருநிலை நீங்கிடா தோம்பும்
என்னுயிர்த் துணைவ னெவரினு மிக்கோன்
இன்னிய மொழியான் இசையசை பிழையான்
தன்னிகரில்லான் முன்னவை நாதர்
அன்னவர் தாதை யவரிரு பெயரோன்
பன்னருங் கீர்த்தி படருமகு டூதர்
கன்னய வொலிமார் கனிமலர்க் கேய
பார்த்தக மகிழுறக் கீர்த்தன ரஞ்சித
மார்த்தன னமுதினை மாற்றிடற் கினிதாய்
அருளக முறையு மஞ்சுக மொழியோ
இருளக மிழிய விறையளி யொளியோ
கேண்மினோ கேண்மின் கீர்த்தன ரஞ்சிதம்
நாண்மினோ நாண்மின் நவிலுத்தற் பாற்றே
இத்தகைப்ப நுவலெவரினுஞ் சிறப்ப
முத்தமிழ் நாவல ரூற்றிடுஞ் சோணாட்
டுத்தம வைம்பதி பெற்றொளிர் ஞானி
கற்றவர் நூலெலாங் கதிருறத் துலக்கும்
அணிபுக ழப்துல் கனியெனும் வள்ளல்
இனிதருள் கூர்ந்து இயற்றின னெச்சில்
வழியெஞ்ச லில்லா வளர்திரு வகலாப்
பழியஞ்சும் வாகைப் பாத்திபன் றனையும்
செறுநர் தமக்குந் தீயவை செய்கிலான்
அறிவரு ளிங்கா லாக்கியோன் றனையும்
இதமது வெஃகி யிசைகவி யளித்தோர்
ஆதபொடு புகர்ந்தோ ரரும்பொரு ளுணர்ந்தோர்
எல்லவர் தமையு மிறைவனர் கருணை
நல்லக மருவி நனிதலை யுலகில்
அறவாழி புக்கி யலகிலா விசையால்
பிறவாழி நீத்துப் பெரும்பதி புகுத்து
இடையறு வின்பத் திதமுற
கடையிலா வருளி விளுற வாழி.

ம. கு. சே

கீர்த்தனரஞ்சிதம் முற்றுப்பெற்றது.

பிழை திருத்தம்.

பக்கம்.	பிழை.	திருத்தம்.
5	ஊோங்	ஊோநங்
5	பந்தியகா	பந்தியார்
12	பெய்தும்	செய்த்தும்
15	செப்ம	செய்ம்ம
28	ணிஸயரி	ணிஸரி
35	தாமகரிகரி	சாமகரிகரி
38	ரிம்மகாரிஸசெம்	ரிம்மகாரி செச்
40	சகிமாலே	சகியேலே
41	இடிவருதோவிள்பின்	நடையாதோ